# நீரில் பூத்த மலர்

தொகுத்தவர்கள்:

மறுமலர்ச்சித் தமிழ்மன்ற தொகுப்பு

நிர்வாகக் குழுவினர்

வெளியீடு:

மறுமலர்ச்சித் தமிழ் மன்றம்

திருக்கோணமலை

"தெணியான்"
"பொலிகண்டி"
31. 1. 68

தெணியகம்
பொலிகண்டி
வல்வெட்டித்துறை

நண்பர் "புரட்சிப் பாலன்"
அவர்களின் அன்பளிப்பு.

Thevaki

# நீரில் பூத்த மலர்

தெணியகம்
பொலிகண்டி
வல்வெட்டித்துறை

தொகுத்தவர்கள்:

**மறுமலர்ச்சித் தமிழ்மன்ற தொகுப்பு**
**நிர்வாகக் குழுவினர்**

வெளியீடு:

மறுமலர்ச்சித் தமிழ் மன்றம்
திருக்கோணமலை

முதற் பதிப்பு

(விற்பனை உரிமை
மறுமலர்ச்சித் தமிழ் மன்றத்திற்கே)

விலை : 1-50

# எமது எண்ணம்

**தை** பிறந்துவிட்டால் நல்லோர் வாழ்விலும் வல்லோர் வாழ்விலும் நல்லதோர் வழிபிறக்குமென்பார்கள். ஆழி சூழ்ந்தவிவ் வகிலம் போற்றும் அறிஞர்கள் அளித்த அறிவுக்கருவூலங்கள் என்றுமே அவனியில் பொய்த்ததில்லை என்னும் உண்மையை நாம் உணர்ந்தபோது எம் அகக்கண்கள் நன்கு விழித்துக்கொண்டன. புல்லைப் பிடுங்கி, புதர்மண்டிக் கிடந்த நிலத்தை வெட்டிச் சரித்து, அந்நிலத்தில் செந்நெல்லைத் தூவி, ஏற்ற மிறைத்து, ஏர் கொண்டுழுது பொல்லாப்பசியை இவ் வகிலத்தில் நில்லாதோட்டி, எம் தொல்லைகளையெல்லாம் நீக்கி, இல்லையென்னாது இரப்போருக்களிக்கும் உரம்மிகு உழவர் கூட்டத்திற்குத் தை பிறந்துவிட்டால் வழியும் கூடவே பிறந்துவிடுகிறது. இலக்கியம் என்னும் பண்பட்ட நிலத்திலே சொல்லென்னும் ஏர்பிடித்து, அறிவு என்னும் பயிர் விதைக்கும் எம் போன்ற இலக்கிய உழவர்கள் வாழ்விலும் மணக்கும் மலராக மலர்ந்த இந்தத் தைத் திங்கள் நல்லதோர் வழியைப் பிறப்பித்தேவிட்டது.

அன்றொரு நாள்...!

நல்ல நிலாக்காலம். பொன்னொளியை இம்மண்ணுலகிற்கு வாரி வழங்கியபடி விண்ணிலே பவனி வந்துகொண்டிருந்தான் பூரணசந்திரன். தெருவோரத்தில் கடற்கரையை அடுத்தாற்போல் நிதானமாக நின்றுகொண்டிருந்த இளந் தென்னை மரங்களில் புதியதொரு சலசலப்பை ஏற்படுத்தியவாறு வீசிக்கொண்டிருந்தது பூங்காற்று: கைகளைச் செம்பட்டு மணலில் ஊன்றியவாறு கடற்கரையோரமாக அமர்ந்துகொண்டிருந்தோம். நாம் மூவர் நல்ல நண்பர்கள். அதுமட்டுமல்ல இலக்கிய நண்பர்களும்கூட.

''என்ன சிந்தனையில் ஆழ்ந்துவிட்டீர்கள்? மீண்டும் இங்கு புயல் வீச ஆரம்பித்துவிட்டால் என்ன செய்வது என்று யோசிக்கிறீர்களா?'' ஒரு நண்பர் மற்ற நண்பர் ஒருவரை வினவினார்.

''வெளியுலகின் கொடிய உருவில் வீசிய அந்தப் புயல் நம் இலக்கிய உலகில் தென்றலாக உருவெடுக்குமா? என்றுதான் சிந்திக்கிறேன் நண்பரே'' என்ருர் அந்த ஆழ்ந்த சிந்தனையிலிருந்த நண்பர்.

''அது எப்படி முடியும்? நீர் என்ன புதிரா போடு கிறீர்?'' இதுவரை மௌனமாக இருவருடைய உரை யாடலையும் கவனித்துக்கொண்டிருந்த மூன்ருவது நண் பர் கேட்டார்.

''புதிரல்ல நண்ப! புதிதாக நாம் நம் நாட்டில் ஒரு புதுமையைச் செய்யவேண்டுமென்று சொல்லுகிறேன்...'' என்ருர் அந்த நண்பர்.

''புதுமையின் பெயரால் நம் நாட்டில் ஏதாவது புரட்சியா?'' மிகவும் துடுக்குக்காரரான மூன்ருவது நண் பர் பெரும் போடு ஒன்றைத் தூக்கிப் போட்டார்.

''ஆமாம். புரட்சிதான்... இலக்கியப் புரட்சி... முதல் நண்பர் சிரித்தார். பிறகு சொன்ஞர். மட்டுநகரிலும், யாழ்நகரிலும், மலைநாட்டிலும் அடிக்கடி தொகுப்புக்கள் வெளியிடுகிருர்கள். நம் நாட்டில் இதுவரை யாராவது தொகுப்புக்கள் வெளியிட்டு எம்போன்ற இளைஞர்களுக்கு ஆக்கமும் ஊக்கமும் தந்துள்ளார்களா? நினைத்தால் வெட்கக்கேடு......

''யாருக்கு?'' துடுக்குக்கார நண்பர் கேட்டார்.

''இந் நாட்டில் தண்டமிழோர் எனத் தலைநிமிர்ந்து வாழும் தமிழ்ச் சமூகத்திற்கு...'' முதலாம் நண்பர் சூடா கவே பதிலளித்தார்.

''இந்த வெட்கக்கேட்டை நம்மால் எப்படித் தடுக்க முடியும்?'' இரண்டாம் நண்பர் நடுவில் கேட்டுவைத்தார்.

''ஏன் முடியாது...? நாமே நம் மறுமலர்ச்சித் தமிழ் மன்றத்தால் ஒரு தொகுப்பை வெளியிட்டால்...?

அன்று பிரிந்தோம். மீண்டும் நாற்சந்தியொன்றில் மரநிழலில் கூடிஞேம். தொகுப்புப் பற்றிய பிரச்சனை

கேள்விக் குறியோடு நின்றது. இதைப்பற்றித் தீவிரமாகச் சிந்தித்தோம். சிந்தனையோடியது; செயல்மிகைப்பட்டது. மன்ற மாதாந்தக் கூட்டத்தில் இதைப்பற்றிக் கடுமையாக விவாதித்தோம். பின்னர் முடிவுசெய்தோம். தொகுப்புக்குரிய வேலைகளில் ஈடுபட ஐவரைக் கொண்ட நிர்வாகக் குழு ஒன்றும் தெரிவுசெய்யப்பட்டது. மன்ற அங்கத்தவர்கள் ஒவ்வொருவர் உடலிலிருந்தும் பெருகிய வியர்வை என்னும் நீரிலே பூக்கவாரம்பித்தது மலர். ''நீரில் பூத்த மலர்'' மலர்ந்து மக்கள் மத்தியிலே பூக்காடாக மணந்தர வேண்டுமென்பதே எமது எண்ணம். எமது எண்ணம் கடவுள் கருணையால் ஈடேறிற்று.

நீரில் பூத்த மலரை நாம் மக்கள் மத்தியில் நல்ல முறையில் மணம்பரப்பச் செய்ய மிகவும் உதவியாக இருந்த சகல பெரியார்களுக்கும், அழகாக அச்சிட்டு உதவிய 'சுதந்திரன்' அச்சகத்தாருக்கும், மறுமலர்ச்சித் தமிழ் மன்றத்தினரின் இதயங்கனிந்த நன்றி உரித்தாகுக.

இவ்வண்ணம்,
மறுமலர்ச்சித் தமிழ் மன்றத்தினர்.

மறுமலர்ச்சித் தமிழ் மன்றம்,
திருக்கோணமலை.
25 - 5 - 1965

☆

திருக்கோணமலை இந்துக் கல்லூரி தமிழ் பாடசாலையின் தலைமை
ஆசிரியரும், திருக்கோணமலை சிவயோக சமாஜத்தின்
கௌரவ செயலாளருமான
பண்டிதர். இ. வடிவேல் அவர்கள் அளித்த

# அணிந்துரை

கவிதைகளையும், கதைகளையும் சுமந்து மலரும் இக் கலைச்சோலையில் நுழைந்து நுகர்ந்தேன். பல் வேறு வர்ணங்களோடு சுவையூட்டும் தேன் பொதிந்து பலவகை நறுமணம் ஊட்டிக்கொண்டு புத்தம் புது மலர்கள் இதனுள் நிறைந்திருக்கின்றன.

சோலை புதியது. சோலைக்குடையவர்களும் மிகவும் புதியவர்கள். அங்கு மலரும் மலர்களும் புதியன. எனவே எல்லாப் புதுமைகளோடும் பொலியும் இக்கலைச் சோலை எவர்க்கும் இன்ப சுகம் ஊட்டுமென்றே கருதுகிறேன்.

முதிர்ந்த கவிஞர்களுடைய அனுபவங்கள் செறிந்த கவிதைகள் கற்பவர்களுடைய இதயத்தை நெகிழப் பண்ணிவிடுகின்றன. இந் நூலிலுள்ள பல கவிதைகளைப் படிக்கும்போது அத்தகைய நெகிழ்ச்சி உண்டாகின்றது. இயற்கையின் எழிலில் இரண்டறக் கலந்து இன்பக் கவிதை புனையும் கவிஞர்களையும் சோலையில் கண்டு ஆனந்திக்கிறேன்.

கற்பனைகள் கரைபுரண்டு செல்லும் கதைக்கொத்துக்கள் பல இச் சோலைக்கே சொந்தமான மலர்க்கொத்துக்கள். இம் மலர்க் கொத்துகளில் ஒரிரு அனுபவத்தை வைத்துக்கொண்டு அதனை நம்மையும் அனுபவிக்கும்படி கற்பனையில் இழுத்துச் செல்லும் கதாசிரியர்களைக் கண்டு ஆனந்தித்தேன். கதை புனைய ஆதாரமாக எடுத்துக் கொண்ட விஷயங்கள் மனித வாழ்க்கைக்கு இன்றியமையாதனவாக இருத்தலால் கதையைப் படிப்போர் உண்மைத் தத்துவங்களையும் அறிந்துகொள்ளும் வண்ணம் இக் கதைக் கொத்துக்கள் அமைந்திருப்பது இக் கலைச சோலைக்கே அழகூட்டுவனவாய் இருக்கின்றன.

புதுமை தரும் புது முயற்சி மேன்மேலும் வளர்ந்தோங்கி முது முயற்சியாகி அனைவருக்கும் நலம் பயக்க இறைவன் அருள்வானாக.

பண்டிதர். இ. வடிவேல்

திருக்கோணமலை,
25-5-1965

திருக்கோணமலை தமிழ் எழுத்தாளர் சங்க கௌரவ தலைவரும்,
கழகப் புலவருமாகிய பெ. பொ. சிவசேகரன் அவர்கள்
அளித்த

# வாழ்த்துரை

பிரம்மா, விஷ்ணு, உருத்திரன் — இத்தேவர்களை நாம் புராணத்தில் படித்து ஆச்சரியப்படுகின்றோம். ஆனால் நேரில் பார்த்ததில்லை. இவர்கள் இருந்திருக்கமுடியுமா? இக்கேள்விக்கு 'முடியும்' என்று பதில் அளிக்கக் கூடிய உறுதிப்பாட்டைத் தருபவர்கள் இன்றுள்ள இளைஞர்கள். இவர்களின் செயல்கள் பிரம்மா, விஷ்ணு, உருத்திரன் ஆகிய மூவரையுமே திணறடித்துவிடுகின்றன. ஆக்கல், காத்தல், அழித்தல் ஆகிய முத்துறைகளிலும் இளைஞர்களுக்கு ஈடானவர் எவருமில்லை. துணிந்து செயலாற்றும் நெஞ்சுரம் இவர்களுக்கு இருப்பதால் இவர்கள் சரியோ, பிழையோ ஒன்றைச் செய்துமுடித்து விடுகிறார்கள். செயல் வீரர்கள் இவர்கள்.

இவர்களின் செல்வாக்கு இன்று எல்லாத்துறையிலும் செறிந்திருந்தபோதிலும் எழுத்துத்துறையில் இவர்களின் ஆதிக்கமே இன்று மும்முரமாகக் காணப்படுகிறது. கற்றுத் துறை போய அறிஞர்க்கில்லாத துணிவு இச் 'சிறு மட்டங்களுக்கு' இருப்பதால் இன்று எழுத்துலகில் ஓர் உயிர்த் துடிப்பு இருப்பதைக் காணக்கூடியதாக உள்ளது. இக் காலத்தில் அரிய படைப்புக்கள் தோன்றவேண்டுமாயின் இளைஞர்கள் மூலம்தான் அது உருவாகவேண்டும். வருங் காலம் வியந்துபாராட்டும் அரிய படைப்புக்களுக்கு உரிய அறிகுறிகள் இளைஞர்களின் எழுத்துக்களில் ஒளி விடுவதைக் காண்கின்றேன்.

திருக்கோணமலை இளைஞர்களின் உள்ளத்தில் உதித்த கருத்துக்கள் உருவகம்பெற்று நூல்வடிவில் இன்று வெளிவருவதைக் கண்டு என்னுள்ளம் பெருமகிழ்வெய்துகின்றது. திருக்கோணமலை இளைஞர்கள் இலக்கிய உலகுக்கு அளிக்கும் முதல் தொகுப்புநூல் இது.

இத்தகைய ஒரு தொகுப்புநூலை வெளியிட முன்வந்துள்ள திருக்கோணமலை 'மறுமலர்ச்சித் தமிழ் மன்றத்தினரை' உளமார வாழ்த்துகின்றேன்.

இளைஞர்களின் இலக்கியப்பணி வெல்க.

பெ. பொ. சிவசேகரன்

இராஜவரோதயம் வீதி,
திருக்கோணமலை,

# 'அழகே திரும்பு'

— மி. அ. நிலாவிளியன் —

கன்னித் தமிழின், அழகுடையாள்,
கலையின் சிலையாம் கண்நோக்க
செந்நெல் வரம்பில் அன்னநடையில்
சிலையாள் அழகு மின்னலிடும்.

கன்ன அழகு தேன்பழமோ?
கண்ணின் அழகு கயல்மீனோ?
கான மயிலின் நடைதானோ?
காணும் கண்கள் நம்பாது.

கிராம அழகு கிறங்கிட
கிளியாள் செல்லும் அழகினிலே
பிரமன் சிருஷ்டி இதுவல்லோ
பின்னல் அழகை என்சொல்வேன்?

கண்ணே நினது கடைக்கண்ணை
காலை நானும் நோக்கின்றேன்
இன்னும் உன்னைப் பார்க்கின்றேன்
ஏனோ திரும்பிப் பாராயோ?

# மறுமலர்ச்சித் தமிழ் மன்றம்

தலைவர்

திரு. ந. ஸ்ரீஸ்கந்தராசா

உப தலைவர்

திரு. மலைமதி சந்திரசேகரன்

செயலாளர்

திரு. ந. வி. திருச்செல்வம்

உப செயலாளர்

திரு. புரட்சிபாலன்

பொருளாளர்

திரு. செ. தவராஜசிங்கம்

உப பொருளாளர்

திரு. கு. திருச்செல்வம்

உறுப்பினர்கள்

ஜனாப் ஜெ. காதர் மிஸ்கீன்
திரு. வீ. இராஜேந்திரம்
திரு. வை. ரெங்கநாதன்
திரு. கு. தனபாலசிங்கம்
திரு. நா. மகேந்திரராசா
திரு. சி. சிவஞானசிங்கம்
திரு. க. சித்திரவேல்
திரு. க. ஜெகநாதன்

தொகுப்பு நிர்வாகக் குழுவினர்:

திரு. மலைமதி சந்திரசேகரன்

திரு. 'புரட்சிபாலன்'

திரு. இ. சோமசுந்தரம்
(திருக்கோணமலை 7-ம் வட்டார உறுப்பினர்)

திரு. ந. ஸ்ரீஸ்கந்தராசா

திரு. ந. வி. திருச்செல்வம்

# பார்த்தால் வருமோ பழி

— அன்புமுகையதீன் —

காலை எழுகின்றேன் காதலியே உன்குரலை
நீலக் குயில்கள் திகழ்த்துவதைச் — சோலையிலே
கேட்டுன் நினைவால் கிறுகிறுத்துப் போனேன்
வாட்டா தெனைக்காண வா! [யான்

அன்றொருநாள் நாமிருவர் ஆற்றோரம் சந்தித்து
நின்று கதைத்த நினைவுகளை—இன்றுமனம்
எண்ணிக் கிளுகிளுப்பால் ஏங்கித் துடிக்குதடி!
கண்ணே எனைவந்து காண்!

ஆனைக்கொம் பொத்த அழகிய மார்பகத்தை
ஏனோ மறைத்தாய் இளமயிலே — நானுமதைப்
பார்த்த முதற் கொண்டு பாவையே உன் நினை
வேர்த்து வடிகின்றேன் வீண்! [வால்

நிம்மதியைத் தேடியங்கு நீள்கடலின் ஓரத்தில்
அம்மணியே நான்போய் அமர்ந்தாலும்
—உம்முருவை
வானத்தில் தோன்றுகின்ற வண்ண நிலவினிலே
காணத் துடிக்குதடி கண்!

புத்தகத்தை யள்ளி யுன்றன் பூமார்பி
னோடணைத்து
பித்தேற்றிச் செல்கின்ற பெண்ணாலே
—நித்தமுனைப்
பார்த்துக் களிப்பதற்காய்ப் பாதையிலே
நிற்குமெனைப்
பார்த்தால் வருமோ பழி

உன்னை மறந்தே உலகத்தில் ஓர் கணமும்
கண்ணே நான் வாழ்தல் கனவாகும்—என்னை
மறந்தே ஒருவரை நீ மாப்பிள்ளையாய்க்
கொண்டால்
இறந்தேகாண் போவேன் இனி!

# இறைவா நீ ஒரு முறை வா!

— சு. வி. மூர்த்தி —

புவி வாழும் மனிதர் சிலர் பொல்லாமை இருளென்னும்
போர்வையிலே ஒளிந்திருந்து புகுந்து விட்டார்
[எம்மிடையே
எவர் நல்லார் எவர் தீயார் என்றெண்ண முடியவில்லை
எமக்கிதனை விளக்குதற்கு இறைவா நீ ஒரு முறைவா!

காதல் எனும் மொழி பேசிக் கவர்ந்து மனம் இணைந்த
[பின்னர்
கனவு என அதை மறந்து காதல் தனைக்
[கொல்லுகின்றார்;
போதும் ஐயா இக்கொடுமை பொழுது போக்கல்ல
[காதல்
புரியவைக்க ஒரு முறை இப்பூவுலகம் வா இறைவா!

கல்லானாலும் கணவன் அவன் கருணையே தன்
[இனிமையெனக்
களங்கமில்லா மனத்துடனே கணவன் தன் சுகம்
[நாடும்
இல்லாளின் துணை இருக்க இன்னொருவர் துணை தேடும்
ஈனர் தம் குணம் திருத்த இறைவா நீ ஒருமுறைவா!

சிலர் வாழச் சிலர் தாழும் சிறப்பில்லா வாழ்க்கை
[இந்த(ச்)
செகத்தினிலே இனி வேண்டாம் சீர் திருத்தம்
[செய்திட நீ
சில நாட்கள் இங்குவாழ சிந்தையிலே எண்ணங்கொண்டு
சீக்கிரமாய் வந்து பொல்லாச் சிறுமனிதர்
[கொடுமையைப் பார்!

பண்பும் அன்பும் நிறைந்திருப்போர் படுகின்றார்
[துன்பம் பல
பதுக்கி வைத்துச் சுகம் பெறுவோர் பார் இதனில்
[சிறப்புடனே
இன்பத்தைத் துணையாய் வைத்து இருக்கின்றார்
[இங்கிதனை
எல்லார்க்கும் பகிர்ந்தளிக்க இறைவா நீ ஒரு

# ★ ★ ★ அன்னை ★ ★ ★

— செல்வி எஸ். பாலதேவி —

மழலை மொழிக் கிளி மொழியும்
மருவும் குயிலின் கனி மொழியும்
குழலின் இனிய பண் ணொளியும்
குழைந்து வருவ தவள் குரலே!

பண்ணும் நாணும் இன் குரலாள்
பாரில் எனக்குப் பெருந் துணையாள்
என்றன் சுற்றம் சொந்த மவள்
இமையைப் போலக் காத் திருப்பாள்!

உள்ளக் கோயில் ஒளி அவளே
உலகின் பாரிய நிதி யவளே
விள்ளற் கரிய பெருந் துன்பம்
விலக்க வந்திடும் இரவி யவளே!

மழலை மொழிக் கிளி யென்பாள்
மகிழ் வுடன் என்னை அணைத்திடுவாள்
அழும் போது என்னைத் தேற்றிடுவாள்
அன்னை அவளே என் தெய்வம்!

விஜி! நீ என் உள்ளத்திலே மூட்டிருயே அன்புத்தீ. அத் தியிலே என் காதல் வாடிய முல்லை மலர் போலக் கருகிவிட்டாலும் என் உள்ளம் புண்பட்டு விடவில்லை. நீ என் உள்ளத்தைப் பண்படுத்திவிட்டாய். விஜி! நீ எந்த உலகில் வாழ்ந்தாலும் நான் உன் இதயத்தில் தெய்வமாகவே வாழ்வேன்.

# நீ மூட்டிய தீ

—புரட்சிபாலன்

ஐயோ என்ரை தங்கமேளாரே ... என்ரை செல்ல நாச்சியாரே ... என்ரை கிளியாரே ... எங்கட தங்க ராசாத்தி! உன்னைப்பத்தி நாங்கள் எவ்வளவு மனக் கோட்டைகளெல்லாம் கட்டினனுங்களெண்டு உனக்குத் தெரியுமா? அதெல்லாவற்றையும் உடைச்செறிய வேண்டுமென்று எத்தனை நாளாணை நீ நினைச்சிருந்தனி? பெற்றவங்களையும் கூடப் பிறந்ததுகளையும் தவிக்க விட்டிட்டுப் போக எப்படியடி உனக்கு மனசு வந்தது? இப்படி நீ எங்களிட்ட சொல்லிக் கொள்ளாமல் போவாயெண்டு நாங்கள் கனவிலகூட நினைச்சிருக்கல்லியேடி ராசாத்தி ... என்ரை கிளியாரே ... தங்க நாச்சியாரே...

சுமார் நாற்பது வயது மதிக்கத்தக்க பெண் ஒருத்தி ... ஐயோ என் விஜி! ... உன் உயிரற்ற உடலைக் கட்டிக்கொண்டு தன் தலையிலும், மார்பிலும் ஓங்கி ஓங்கி அடித்து ஒப்பாரி வைக்கிறாள். இந்தப் பெண்தான் உனது தாயாராக இருக்க வேண்டும். ஏனென்றால் இந்த அம்மாளின் முகத்தில் கன்றை இழந்த தாய்ப் பசுவின் வேதனையின் சாயல் களைகட்டியிருக்கிறது. என் விஜி! உன்னைப் பெற்றவளை எனக்குத் தெரியாது. உன்னையே நான் முதன் முதலில் இன்று பிணமாகப் பார்க்கும்பொழுது உன்னைப் பெற்றவளை நான் ஏற்கனவே எப்படித் தெரிந்து கொண்டிருக்க முடியும்...? உன்னைப் பெற்றவளின் வேதனை நிறைந்த ஒப்பாரி ஓலம் அந்த மண்டபமெங்கும் வெம்பி வெடித்துச் சிதறுகின்றது. விஜி! உனது உயிரற்ற உடலைச் சூழ்ந்து பெண்கள் கூட்டம் நிறைந்திருக்கின்றது. அவர்களும் ஒருவரை ஒருவர் கட்டிப் பிடித்துக் கொண்டு ஒப்பாரி ஓலம் எழுப்புகிறார்கள். விஜி! அவர்களனைவரும் உனது உறவினர்களா? அல்லது அயலவர்களா? எனக்கு எதுவுமே தெரியாது. என்னருமை விஜி! கஞ்சமலரொத்த உனது விழிமலர்களை ஒரு முறை திறந்து இந்தப் பரிதாபக் காட்சியைப் பார். வேதனையினால் வெம்பி வெடித்துச் சிதறும் இந்த வெந்த உள்ளங்களைப் பார். நீ பார்க்க மாட்டாய் விஜி. நீ பார்க்க மாட்டாய். நீ தான் என்றுமே மீளாத துயிலிலாழ்ந்து விட்டாயே? உன்னால் இனி எவ்விதம் இந்தக் காட்சிகளைக் காணமுடியும்?

''என்ரை தங்கமேளாரே ... என்ரை...இனி யாரே...'' பெண்களின் மரண ஓலம் எழுந்து மேலோங்கி உரம் பெறுகின்றது. நான் இடுக்கிட்டு உணர்வு பெறுகிறேன். என் இதயம் இரும்பாகக் கனக்கிறது. உடல் மரத்துக் கல்லாக உணர்வு பெறுகிறேன். என்னையும் மீறி என் கண்களில் கண்ணீர் அருவி கட்டுகிறது. யாரோ ஒரு பெரியவர் பெண்கள் கூடியிருந்த மண்டபத்திலிருந்து ஆண்கள் கூடியிருந்த வெளி முற்றத்திற்கு வந்து கொண்டே குரல் கொடுக்கின்றார்.

''என்ன மனே சபாபதி! நேரமல்லே போட்டுது. இந்தக் காரியங்களக் கண்பொழுதோடல்லே செய்ய வேணும்... நீயுமா அழுது கொண்டு இங்கே குந்தியிருக்கிறாய்...? என்ரை ராசாவல்லே...எழுந்திரணை...''

அந்தப் பெரியவர் தள்ளாடிக் கொண்டே சக்தியற்றவராய் என்னைத் தாண்டிச் சென்று சபாபதி என்று குறிப்பிட்டவரின் தோள்களைப் பிடித்து உலுப்புகிறார். பெரியவரிடமிருந்து எழுந்த பனங்கள்ளின் துர்நாற்றம் என் நாசித் துவாரங்களின் வழியாகச் சென்று வயிற்றில் குமட்டலை எழுப்புகின்றது. மூச்சை இழுத்துப் பிடித்து அடக்கிக் கொண்டு எப்படியோ அமர்ந்து கொண்டிருக்கிறேன். என் உயிருக்குயிரான விஜி! நீ இப்படியானதொரு முடிவை இறுதியில் தேடிக்கொள்வாயென்று நான் கனவில்கூட நினைத்திருக்கவில்லையே? உன் வாழ்க்கையின் முடிவு இப்படியா முடியவேண்டும்? என்

விஜி! உன் இருண்ட வாழ்வில் விடிவு ஏற்படு மென்று எண்ணியிருந்தேனே......''

என் இதயம் வேதனை தாங்க முடியாமல் வெடித்துச் சிதறுகிறது. உணர்ச்சிகள் உரங் கொண்டு என்னைப் பிடித்து உலுக்குகின்றன. வாய்விட்டழ முடியாமல் முகத்தைக் கைகளால் மூடிக்கொண்டு விம்முகிறேன்.

விஜி! உன் உயிரற்ற பொன் உடலைப் பாடை யிலே தூக்கிக் கிடத்துகின்றனர். உன் அம்மா எல்லோருடைய பிடியையும் மீறிக் கொண்டு உன்னுடைய பட்டுத்தளிர் மேனியைத் தொட் டுத் தழுவித் தன் பொங்கி வரும் கண்ணீரால் உன்னை மீண்டும் குளிப்பாட்டுகிறாள். வெளிறிக் கிடந்த வாயதரங்களால் உன் வாடிச் சுருங்கிய கன்னங்களில் ஆயிரக் கணக்கில் முத்த மழை பொழிகிறாள். பெரியவரின் குரலில் அவசரம் இழையோடுகிறது. நான்கு பேர் உன்னைக் கிடத்தியிருந்த பாடையைப் பிடித்துத் தூக்கு கின்றனர். மண்டபத்தினுள் அழுகுரல் வெகு வாக ஓங்கி வலுக்கின்றது. நான் உன்னையே கண்ணீர் மறைக்கும் கண்களினால் உற்று உற்று நோக்குகிறேன். விஜி! இளம் வாழையின் தண்டு போன்ற உனது உடல் விளக்கில் வீழ்ந்து கரு கிய வீட்டில் பூச்சி போன்று கறுத்திருக்கிறது. பெண்கள் ஒருவரை ஒருவர் இறுகக் கட்டிப் பிடித்துக் கொண்டு கதறிக் கொண்டிருக்க பாடைத்தூக்கிக் கொண்டு வெளியே நடக்கின் றனர்.

"ஐயோ ... என்ரை கிளியாரே ... இந்த வீடாளப் பிறந்த நீ... இன்று காடாளம் போறியாணை ... என்ரை செல்லநாச்சியாரை ... என்னிடமிருந்து பிரிக்காதீங்க ... ஐயோ ... என்ரை கிளியாரே ... நானும் உன்னோடை வாறனணை..." விஜி! உனது அன்னை நடக்க முடியாமல் சோர்வுற்ற கால்கள் தள்ளாடத் தெருவாசல் வரைக்கும் ஓடி வருகிறாள். அவள் வாசலையடையுமுன் மயங்கிக் கீழே சாய்கிறாள். நாலைந்து பெண்கள் ஓடிவந்து அவளை மண்டபத்தினுள் தூக்கிக் கொண்டு செல்லுகின்றனர். நான்...? விரைந்து நடக்கின்றேன். இவ்வுலகிலா? அல்லது கனவுலகிலா...? எனக்கே சரியாகத் தெரியாது. எனக்கு முன்னே ... சவ ஊர்வலம் ஊர்ந்து கொண்டிருக்கிறது. என் கண்களில் கண்ணீர் திரையிட்டிருப்பதனால் வெளியுலகக் காட்சிகளெல்லாம் சற்று மங்கலாகவே தெரிகின்றன. என் உடல் சோர்ந்து தள்ளாடுகிறது. கண்கள் ஒளியிழந்து சூல்கொண்ட கருமேகத்தைப்போல் இருண்டு கொண்டே வருகின்றன.

"விஜி! என்னை விட்டு இவ்வளவு சீக்கிரம் பிரிந்துவிட்டாயே? இந்த வேதனையை என்னால் எப்படித் தாங்கிக் கொள்ள முடியும்...? விஜி! நீயே சொல். என்னால் எப்படித் தாங்கிக் கொள்ள முடியும்...?"

மத்தாப்புக் கட்டுகள் வானில் வெடித்து மலருகின்றன. திடுக்கிட்டு நான் உணர்வுபெறுகிறேன் "அடேய் செல்வம்! பிள்ளையார் கோயில் வருது ... வெடி கொளுத்தாதே! ...

தாதே...'' சற்று தொலேவிலிருந்து குடிகாரப் பெரியவரின் குரல் எழுந்து மடிகிறது. நான் உணர்ச்சியற்ற வெறும் பிண்டமாக...உயிரற்ற உடலாக நடந்து கொண்டிருக்கிறேன். என் உள்ளம் அலேமோதுகிறது.

விஜி! நீ...யாரோ...? நான் யாரோ. உன்னே நான் இதற்கு முன் பார்த்ததுமில்லே. நேருக்கு நேர் பழகியதுகூட இல்லே. அவ்விதமிருக்கும் போது நம்மிடையே அந்தப் பாசப்பிணேப்பு எப்படியேற்பட்டது? அந்தத் தெய்வீகப் பிணேப் புத்தாே என்னே இங்கே கொண்டுவந்து நிறுத் தியது? விஜி! நம்மிடையே ஏற்பட்ட இந்தத் தெய்வீகப் பிணேப்பு நீடித்து நிற்காமல் கால வரம்பிற்குட்பட்டு ஒரு வருடத்திற்குள்ளேயே அழிந்து விட்டதே! உன் பிரிவு எனக்கு எவ்வ ளவு வேதனேயைத் தருமென்பதை உணராமல் போய்விட்டாயே? உன்னேக் குறை சொல்லிக் குற்றமில்லே. விஜி! உன் அன்புக் காதலனின் உயிர்ப்பிரிவு உன்னே இந்தக் கொடிய நிலேக் காளாக்கி விட்டிருக்கிறது. கடவுள் கருணேயுள் ளவர் என்று நம்புகிறார்களே...! கடவுளேக் கரு ணேக் கடல் என்று கூடச் சொல்லுகிறார்களே...? அந்த மூட மக்களின் நம்பிக்கையே வீண்தானு? நம்பிக்கையின் அடித்தளத்தில் அமைவது தானே வாழ்க்கை. அந்த வாழ்க்கையையே அழித்துவிட்டானே மாபாவி. கண்கெட்ட கட வுளே! உன் சாகஸ லீலேகளேக் காட்ட என் விஜி தானு அகப்பட்டாள்...?''

திடீரென மத்தாப்புகள் வானில் வெடித்து ...கின்றன. தெருவோரத்தில் பிரிந்து சரிந்து

கிடந்த வேலிகளுக்கிடையில் தலைநீட்டி வீரா வேசத்தோடு குரைத்துக் குரலெழுப்பிய தெரு நாய்கள் மூலைக்கொன்றாகச் சிதறியோடுகின் றன. என் உள்ளம் அமைதியிழந்து அழுது வடி கிறது.

விஜி! கடந்த ஒரு வருட நமது உறவிலே நம்மிடையே ஏற்பட்ட கடிதத் தொடர்புகளும் இனிய நினைவுகளும் இன்னமும் என் நெஞ்சப் பரப்பில் மிகப் பசுமையாகப் பதிந்திருக்கின் றன. அவைகளை என்னால் மறக்க முடியுமா? மறதியெல்லோருக்கும் இயற்கையென்கிறார் களே? நான் என்னையே மறந்தாலும் அந்தப் பசுமையான எண்ணங்களை என் உயிருள்ளவரை மறக்கவே முடியாதே? என் உயிர் விஜி! அவை கள் அத்தனை ஆழமாக என் நெஞ்சில் பதிந்து கிடக்கின்றன. விஜி! நம் முறவுக்கு வித்திட்ட வளே நீதானே! நீ மறந்துவிட்டாயா...? நான் மறக்கவில்லை...விஜி...நான் மறக்கவில்லை.

அன்புக்குரியீர்!

'மல்லிகை' மாத இதழில் தாங்கள் எழுதிய ''நிழலைத் தேடி...'' என்னும் சிறுகதை படித்தேன். அக் கதையில் வரும் ஏழை ராஜத் தின் பாத்திரம் என்னை மிகவும் கவர்ந்து விட் டது. அக்கதையைப் படித்த பின் தங்களைப் பாராட்ட வேண்டுமென்ற எண்ணம் நிமிடத் திற்கு ஓராயிரம் தடவை என்னுள் எழுகிறது. தங்களுடன் அறிமுகமில்லாத நான் மடல் தொடர்பு கொண்டுள்ளதை எண்ணி நீங்கள் திகைப்படையலாம். என்ன செய்வது...?

தங்கள் திறமையைப் பாராட்டாமல் என்னுல் இருக்க முடியவில்லையே. தங்கள் கரம்பட்ட மடல்காண ஆவல்.

தங்களன்புக்குரிய
விஜி.

அன்பு விஜி! நீ எழுதிய இந்த மடல்தான் நம் உறவுக்கு வித்திட்டது என்பதை நீ நன்கு அறிவாயல்லவா? சொல் விஜி. ஏன் மௌனம் சாதிக்கிருய்? ஓ... நீ இன்று பேசமாட்டாய். நீ தான் உயிரற்ற உடலாகி விட்டாயே! ''பொலிடோல்'' உன் உயிரைக் குடித்துவிட்டதே. விஜி! பொலிடோலை நீ குடித்துவிட்ட பெருமையில் நீள்துயில் புரிகிருய். ஆனுல்...! அது உன் உயிரைக் குடித்து விட்டதே. அதை நீ அறிவாயா...? இல்லை ... இல்லை ... நீ அறிய மாட்டாய். விஜி! நீ இன்று சவம்.

விஜி! அன்று உன் மடல் கண்ட பின்னர் நான் எப்படி மகிழ்ந்தேனென்று உனக்குத் தெரியுமா? நான் எப்படியெல்லாமோ மகிழ்ந்தேன் விஜி. ஆனுல்...நீ அறியமாட்டாய். என் எண்ணக் கருவூலத்திலேயிருந்து பிறக்கும் எண்ணற்ற எழுத்துக்களை விரும்பிப் படிப்பதற்கு இந்தப் பரந்த ஈழ நாட்டிலே ஒரு ஜீவன் இருக்கிறது ... என்ற இனிய நினைவு என் நெஞ்சத்தில் எப்படியெல்லாம் மணம் பரப்பியது தெரியுமா? விஜி! இன்று நினைத்தாலும் அவைகள் இனிக்கும் எண்ணங்கள். கொம்புத் தேனேடு கொடி முந்திரிகையின் பழரசத்தைச் சேர்த்துண்டால் எப்படியிருக்குமென்று நீயே சொல்லேன் விஜி. இந்த

இனிப்பைவிட இரட்டிப்பு மடங்கு இனிப்புடையது என் நெஞ்சில் நிறைந்துள்ள எண்ணங்கள். காலம் கரைகிறது. விஜி! என் நெஞ்சில் ஒரு ரசிகையாகவே வாழ்ந்து வருகிறாய். ஆனால் அதன் பிறகு வந்த கடிதம் என் எண்ணம் தவறு என்பதை உணர்த்தியபோது நான் குழம்பித் தவித்தேனே விஜி. என்னுடைய கதைகளைப் படித்துவிட்டு பாராட்டுத் தெரிவித்து வந்த நீ திடீரென காதலைப்பற்றி என்னிடமே கேள்விகள் பல கேட்கவாரம்பித்தபோது நான் திகைக்காமல் வேறு என்ன செய்ய முடியும்? என் நிலையில் வேறுயார் இருப்பினும் நிச்சயமாகத் திகைப்படையாமலிருக்க நியாயமில்லை. விஜி! நீ என்னை ''அன்புச் செல்வமே'' என்று குறிப்பிட்டு மடல் எழுதியிருந்தமை கண்டு என் நெஞ்சம் நெகிழ்கிறது. விஜி என்னைக் காதலிக்கிறாள் ...விஜி என்னைக் காதலிக்கிறாள் ... இந்த இனிய எண்ணம் என் இதயத்தில் சபல ஊற்றைச் சுரக்கச் செய்கிறது. என் இதயக் கிணற்றில் ஊறிய சபல ஊற்று காதல் வெள்ளமாக நிறைகிறது. விஜி! நீ என இதயக் கோயிலில் தெய்வமாகக் குடியேறுகின்றாய். கலையிலே மிக ஆர்வமுடைய உன்னை என்னுடைய மானசீகக் காதலியாக அடைந்ததையிட்டு நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். விஜி! அன்றிலிருந்து உன்னைப் பற்றியும், உன் பூமணக்கும் பொன்னுடலைப் பற்றியும் நான் கற்பனையில் கண்டு மகிழ்கிறேன். இதுவரை காதலென்னும் புயலில் சிக்காத என் உள்ளமென்னும் மரக்கலம் உன் மடல் சொல்லும் காதற் புயலில் சிக்கிக் கொள்கிறது. உன்னை நான் நினைத்துக் கொள்ளும் பொழுதெல்லாம்

நீ என் மனக் கண்முன்னே நின்று வெள்ளைச் சிரிப்புச் சிரித்து என் இயத்தில் வேதனையை நிரப்புகிருய். விஜி! நீ உண்மையிலேயே என்னைக் காதலிக்கிருயா என்பதையறிய என்னுள்ளத்தில் ஆவல் பிறக்கின்றது. பிறக்காதா என்ன? நான் தான் உன்னைக் காதலிக்க ஆரம்பித்து விட்டேனே! என் காதல் மடலும் என் புகைப் படமும் உன்னைத் தேடிவருகின்றன. தாமதமில்லை, வழக்கம் போலவே உன்பதில் மடல் என்னைத் தேடிவருகிறது. விஜி! உன் மடலை இதயத்தின் உணர்வுகள் குத்திட்டு நிமிர்ந்து நிற்க நான் மிக ஆவலுடன் பிரித்துப் படிக்கின்றேன். கடிதத்தைப் படிக்கும்போது என் கைகள் மட்டு மல்ல... என்னுள்ளமே நடுங்குகின்றது.

என் தெய்வமே!

தாங்களனுப்பிய மடலும் தங்களின் திருவுருவப் படமும் கிடைக்கப் பெற்றேன். தங்களின் பால்வடியும் முகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தாலே பசி தீர்ந்துவிடும் அவ்வளவு அழகாகயிருக்கிறீர்கள். நானே இங்கு வாழமுடியாமல் துன்பத்தின் விளிம்பிலே நிற்கும் பொழுது தங்களை என்ஞல் எப்படி வாழ்விக்க முடியும்? இப்படியொரு கேள்விக் குறியோடு நீ மடலை முடித்திருக்கிருய். விஜி! எழுதிய இந்த மடலிஞல் எனக்கு எதுவுமே புரியவில்லை. குழம்பித் தவிக்கிறேன். விஜி! நான் உன் மனத்துயரத்தைப் பற்றிக் கேட்ட பொழுதெல்லாம் நீ ஏதோ சாக்குப் போக்குக் காட்டி ஏமாற்றிக் கொண்டே வருகிருய்.

"படீர் ... படீர் ... படார்..." மத்தாப்புக் கூட்டுகளின் ஒலி காதைப் பிளக்கிறது. சவ ஊர் வலம் ஊர்கிறது. "என்னும் எப்பன் தூரத்தில தான் சவக்காலை" ... யாரோ சிலர் பேசிக் கொள்ளும் சப்தம் கேட்கிறது. நான் நடைப் பிணமாக நடந்து கொண்டிருக்கிறேன்.

அன்று...! தீபாவளிக்கு முன்தினம். நான் கோயிலுக்குப் போய்விட்டு வீட்டுக்கு வருகின் றேன். "பாவன்! உனக்கு ஒரு பார்சல் வந்திருக் கிறது..." என் தாயார் ஒரு சிறிய பார்சலை என் னிடம் கொடுத்துவிட்டு அப்பால் நகருகிறாள். நான் ஆசையோடு அப்பார்சலைப் பிரிக்கிறேன். கவிஞர் பரமஹம்ஸதாசன் அவர்கள் எழுதிய "தீங்கனிச் சோலை" என்ற கவிதைப் புத்தக மொன்றையும் ஒட்டோகிராப் புத்தகமொன் றையும், தீபாவளி வாழ்த்துமடலொன்றையும் தீபாவளிப் பரிசாக எனக்கு நீ அனுப்பிவைத் திருக்கிறாய். விஜி! என்மீது உனக்கு எத்தனை கொள்ளையன்பு. நான் மகிழ்ச்சியோடு சாய்வு நாற்காலியில் சாய்கிறேன். என் மகிழ்ச்சியில் பங்கெடுத்துக்கொள்வதைப்போல் அது "கிரீச்" எனச் சப்தம் எழுப்புகிறது. ஒட்டோகிராப் புத் தகத்தை எடுத்து விரிக்கிறேன். ஒரு பக்கத் தில்...! வெண்முத்துக்களைக் கோர்த்ததுபோல் அழகிய தெளிந்த நீரோடை போன்ற கவிதை யொன்றை எழுதிமுடித்துக் கீழே உன்னுடைய கையெழுத்தையும் போட்டிருக்கிறாய். உள்ளத் தையள்ளும் தெள்ளுதமிழ் கவிதையை நான் திரும்பத் திரும்பப் படித்துச் சுவைத்துக் கொண்டேயிருக்கிறேன். மறுநாள் ...

தினம். உன்னைப்பற்றிய சிந்தனையில் காலம் கரைகிறது. தீபாவளி தினத்திற்கு மறுதினம். கவிஞர் சு. வே. பஞ்சாட்சரம் அவர்கள் எழுதிய "எழிலி" என்ற கவிதைப் புத்தகத்தையும் ஓட்டோகிராப் புத்தகமொன்றையும் எனது தீபாவளிப் பரிசாக உனக்கு அனுப்பிவைக்கிறேன். காலம் கரைந்து தேய்கிறது. மணக்கும் மல்லிகையாக அன்புமணம் கமழ்கிறது. கல்லூரி விடுமுறையின்போது உனது இல்லத்திற்கு என்னை வரவேண்டுமென்று வற்புறுத்திக் கடிதம் எழுதுகிருய். விஜி! காதல் தெய்வமாக என் நெஞ்சிலமர்ந்துவிட்ட உனது அன்பு வேண்டுகோளை நிராகரிக்க முடியுமா? உனதுஎழிலுருவைக் கண்களால் காணவேண்டுமென்ற கரையில்லாத ஆவலில் கட்டாயம் வருகிறேன் எனப் பதில்மடல் எழுதுகிறேன். என் வரவினுல் உனக்கு ஏற்படப்போகும் மகிழ்ச்சியை எழுத்துக்களாக்கி எனக்கு மடலுருவில் அனுப்பியிருந்தாயே? அம்மடல் கண்டு நான் எப்படியெல்லாம் மகிழ்ந்தேனென்பதை நீ எப்படியறிவாய்?

"நமது வாழ்க்கை ஒரு படகைப்போன்றது. அதில் இன்பமும் துன்பமும் இரு துடுப்புக்கள். அத்துடுப்புக்களின் உதவியோடுதான் அப்படகு கரை சேரவேண்டும்..." இந்தக் கருத்தை நீதான் எனக்கு முன்பு ஒருமுறை எழுதிய மடலில் குறிப்பிட்டிருந்தாய். இந்தக் கருத்தை நெஞ்சிற்கொண்ட நீயா இப்படியொரு மடலை எனக்கு எழுதினுய்? நினைக்க நினைக்க ஆச்சரியம் [illegible] ...ணையும் கூட வருகிறது. நீ எழு

திய அந்தக் கடிதத்தைத் திரும்பத் திரும்பப் படிக்கிறேன். என் தலை வேகமாகச் சுற்றுகிறது.

என் இதயத்திலுறையும் அன்புத் தெய்வமே! இன்று தங்களிடம் ஒரு உண்மையைச் சொல்லப்போகிறேன். இத்தனை நாளும் தங்களிடம் இந்த உண்மையை மறைத்தமைக்கு மன்றாட்டமாக மன்னிப்புக் கேட்டுக்கொள்கிறேன். பாலன்! நீங்கள் என்னைக் காதலிக்கிறீர்கள். ஆனால் எனக்கு ஏற்கனவே ஒரு காதலர் உண்டு. அவர் ஒரு இளம் கவிஞர். காதல் புனிதமானது. அப்புனிதமான காதலுக்கு உரியவருக்குக் கொடுத்த ஸ்தானத்தைவிட என் இதயத்தில் தங்களுக்கு மேலானதொரு ஸ்தானத்தையே நான் கொடுத்திருந்தேன். என் இதயத்தில் நீங்கள் தெய்வமாகவே வாழ்ந்தீர்கள். அன்பின் தெய்வமே! என் காதலர் சமீபத்தில் ஏற்பட்ட விபத்து ஒன்றில் இறந்துவிட்டார். அந்த இழவுச் செய்தி கேட்ட பின்னும் நான் உயிர்வாழ விரும்பவில்லை. ஆகவே என் தெய்வத்திற்கு இதுவே கடைசி மடலாகயிருக்குமென நினைக்கிறேன். நான் இறந்தாலும் நீங்கள் என்பொருட்டு இவ்வுலகில் வாழவேண்டும். இதுவே இந்த அபாக்கியவதியின் இறுதி ஆசை."

என் கையிலிருந்த மடல் நழுவிக் காற்றோடு கலக்கின்றது. என் இதயம் வெடித்துச் சிதறுகின்றது. விஜி! நீ என் முன்னே சிதறிவிழும் விழிநீரலைகளோடு நின்று சிரிக்கிறாய். அந்தச் சிரிப்பு ......! மரணத்தின் வாசலிலே நிற்பவளின் வேதனை நிரம்பிய விரக்திச்சிரிப்பு...! உன் கருவிழிகளிலே கண்ணீர். ஆனால் உன் இதழ்கடை

யிலே சிரிப்பு. உன் வாழ்க்கை எவ்வளவு விசித்திரமானது. விஜி! நீ என்னைக் காதலிக்கவில்லையே என்பதற்காக நான் கண் கலங்கிக் கவலைப் படுவேன் என நினைத்துக் கண்ணீர் சிந்துகிருயா? இல்லை விஜி ஒருநாளுமில்லை. விஜி! நான் மனிதன். உன்னைப் பொறுத்தவரை நான் உன் நெஞ்சில் தெய்வமாக வாழுவதையே விரும்புகிறேன். என்னருமை விஜி! உன் காதல் மலரவேண்டும்... அது நடக்காதது விஜி... ஆமாம் உன் காதல் தான் செத்துவிட்டதே. ஆனல்... விஜி! நீ வாழ வேண்டும்.

நான் அன்றே மல்லாகத்திற்கு ரயிலேறி உன் இல்லம் தேடி ஓடிவருகிறேன் அமைதி யிழந்த நெஞ்சிற்கு ஆறுதல் கூற. விஜி! உன் இல்லம் எனக்குத் தெரியாது. இதற்கு முன் நான் உன் இல்லம் வந்தவனல்லவே. தெருக்கோடியிலிருந்து ஒரு சிறுவன் உன் இல்லத்திற்கு வழி காட்டி என்னை அழைத்துவருகிறன். தூரத்தில் வரும்பொழுதே உன் இல்லத்திலிருந்து பறை ஓசை கேட்கிறது, அதையும் தொடர்ந்து மரண ஓலம் எழுந்து ஓங்குகிறது. விஜி! என்னை ஏமாற்றி விட்டுப் போய்விட்டாயா? கடவுள் ஒரு கண் கெட்ட குருடன். என் இதயம் கோவெனக் கதறியழுகிறது. நான் விக்கித்து விறைத்துப் போய் நிற்கிறேன்.

"படீர் படீர் படார்......" மத்தாப்புக் கட்டுகளின் சிதறல் ஒலி காதைப் பிளக்கிறது. நான் [illegible] உணர்வு பெறுகிறேன். எதிரே......!

சவக்காலை, ஊர்வலத்தின் வேகம் தடைப்படுகிறது. நான் திகைத்துப்போய் பேயறைந்தவனைப்போல் மௌனமாக நிற்கிறேன். சவக்காலையில் நடைபெறும் இறுதிச்சடங்குகள் எல்லாம் முறைப்படி நடைபெறுகின்றன. ஐயோ என் விஜி! எவ்வளவு பெரிய கொடுமை. உன் உயிரற்ற உடல்மீது பெரிய பெரிய விறகுக்கட்டைகளை அடுக்கிவைக்கிறார்கள். உன் தந்தை உன் உடலுக்குத் தீ மூட்டுகிறார். விஜி! நீ அதை அறிவாயா? நீதான் பிணமாகிவிட்டாயே? உன் உடலில் மூண்ட தீ கொழுந்துவிட்டெரிகிறது. விஜி! நீ காற்றாகி அகண்ட விண்வெளியில் கலக்கிறாய். உன் உடலில் மூட்டிய தீ சற்றைக்கெல்லாம் அணைந்து அவிகிறது. ஆனால் விஜி! நீ என் உள்ளத்திலே மூட்டினாயே அன்புத்தீ, அத்தீயிலே என் காதல் வாடிய முல்லைமலர் போலக் கருகிவிட்டாலும் என் உள்ளம் புண்பட்டுவிடவில்லை. விஜி! நீ என் உள்ளத்தைப் பண்படுத்திவிட்டாய். விஜி! "நீ எந்த உலகில் வாழ்ந்தாலும் நான் உன் இதயத்தில் தெய்வமாகவே வாழ்வேன்..." என் இதயம் பயங்கரமாக ஓலமிடுகிறது.

அந்தப் பெருமையில் இரத்தம் ஊறும் கண்களினால் உன்னை எதிர்த்துச் சாம்பராக்கும் தீயையே உற்றுப் பார்த்துக்கொண்டு நிற்கிறேன்.

# ‘‘கயல் மீன்’’

— மலைமதி சந்திரசேகரன் —

வட்டமுகம் மின்மினியோ என்றேன் அந்த
    வானத்துத் தாரகையா? மதியமென்றாள்
தொட்டவுடன் ஓடியுமின்னல் இடையோயென்றேன்
    தோன்றிப்பின் மறைவேனோ? மழை நானென்றாள்
கட்டழகியுன் விழிகள் கயல் மீனென்றேன்
    கானகத்து மான்விழிகள் போங்களென்றாள்
இட்டமுடன் இராமனுயிர் ‘சீதா’ என்றேன்
    ஏனத்தான்? இராவணனா கவர்ந்தானென்றாள்

கற்பினுக்கே கண்ணகி நீ உறுதியென்றேன்
    கணவனுயிர் காத்த பலர் உண்டேயென்றாள்
நற்பண்பால் வாசுகிக்கே நிகர் நீ யென்றேன்
    நாயகரே மாதவியும் உயர்ந்தாளென்றாள்
வெற்றிமகள் வீரத்தாய் நீதானென்றேன்
    வேடிக்கை கலைமணக்கும் வாணியென்றாள்
ஒற்றுமையில் ரோஜாவின் கன்னமென்றேன்
    ஒறுக்காது ஒப்பொன்றே பவளம் என்றாள்

நடையொன்றே போதுமடி அன்னமென்றேன்
    நானெதற்கு நீரோடு கலக்க வென்றாள்
புடைபோட்ட தங்கமடி மேனியென்றேன்
    பூமித்தாய் தந்தாளே மறந்தீரென்றாள்
தடையில்லை கண்ணே, எழில் கமலமென்றேன்
    தன்னொருகால் இழந்து நிற்க விதியோ என்றாள்
விடைகொடடி என்னன்பே தமிழ் நீ யென்றேன்
    [illegible] மார்போடு அணைத்தாள் என்னை.

# நிலத்தினிலே நம்மிடையே பிரிவெதற்கு!

"இண்ணியா ராஜன்"

எண்ணத்தில் புதுமலர்கள் தோன்றவேண்டும்
இதயத்தில் புதுஅன்பு மலரவேண்டும்
கண்களிலே நுண் ஒளிகள் மிளிர வேண்டும்
கையிரண்டும் கர்ணன் போல் வழங்கவேண்டும்.

நானென்ற அகந்தை நெஞ்சில் அழியவேண்டும்
நாமென்ற பொதுவுடமை அமரல் வேண்டும்
வானென்ற கார்தனிலே நிலவு போல்
வாழவேண்டும் வையகத்தில் நீங்கமட்டும்.

சாதியிலே பலபிரிவு உண்மையாயின்
சாக்காட்டில் ஒருமித்து வாழ்வதென்ன
நீதியின்முன் நாமெல்லாம் ஒருவரென்றால்
நிலத்தினிலே நம்மிடையே பிரிவெதற்கு!

# விதியின் விளையாட்டு

— மு. சந்திரசேகரன் —

காதலித்தேன் ஒரு பெண்ணைக் காதவழிசென்றுவிட்டாள்
வேதனையைத் தந்துவிட்டாள் விம்மியழச்
[செய்துவிட்டாள்
சோதனையா? என் வாழ்வில் சோக மழை பெய்கிறதே
பாதகியா? இல்லையவள் பருவத்தின் மலர்ப்பூங்கா.

கண்டு கலந்து வளர்ந்த வெங்கள் காதல் மரம்
உண்டு சுவைக்க ஒரு கனியைத் தரவில்லை
அன்றலர்ந்த முல்லைமலர் அவள் முகமோ வட்டநிலா
என்று நிதம் வாடுகிறேன் இதயத்தாள் வருவாளோ?

இரவில்லை, பகலில்லை எதுவும் எனக்கில்லை
உறவில்லை உணர்வில்லை உதிரம் ஒரு சொட்டுமில்லை
வரவில்லை வழியில்லை வாட்டத்தின் மறுபதிப்பு
மறப்பில்லை இறப்பில்லை மாயையிது என்காட்சி

சிந்தனையின் சித்திரத்தில் சேர்ந்துவிட்ட வர்ணமவள்
பந்தயமா? போட்டாள் பரிகாசம் கண்வீச்சு
வந்தவளின் வார்த்தைகளில் எந்தனுளம்
[பறிகொடுத்தேன்
விந்தையென நினைப்போர்க்கு விதியின் விளையாட்டு இது.

—பணம் மட்டும் இருந்தால் போதுமா? பண்பு இருக்க வேண்டாமா? பட்டம் பதவி மட்டும் இருந்தால் போதுமா? பகுத்தறிவு இருக்க வேண்டாமா?—

# அகல் விளக்கு

—ந. ஶ்ரீஸ்கந்தராசா

'மீன்பாடும் தேன்நாடாம்' மட்டக்களப்புப் பிரதான வீதியில் அதிகமாக ஏழை மக்களின் சிறு சிறு குடிசைகளும், கல்வீடுகளுமே அமைந்திருந்தன. ''சேற்றின் நடுவினிலே செந்தாமரை மலர்வது போல்'' அவ்வீடுகளின் மத்தியில் இரண்டு அடுக்கு மாடிவீடு ஒன்று அமைந்திருந்தது. அவ்வீட்டின் உரிமையாளர்தான், மட்டக்களப்பில் விரல்விட்டு எண்ணக்கூடிய சிலபல செல்வந்தர்களுள் ஒருவரான சரவணமுத்து என்பவர்.

சரவணமுத்து 'மட்டக்களப்பு ஆண்கள் பாடசாலை'யின் தலைமை ஆசிரியர். ஆசிரியர் சா

வணமுத்து வருகின்றார் என்றால் போதும்; ஆண்கள் பாடசாலையே கதிகலங்கிவிடும். ஆசிரியரிடம் பிள்ளைகளுக்கு அவ்வளவு பயபக்தி இருந்தது. ஆனால் பாடசாலையில் உள்ள மதிப்புக்கூட ஊரில் அவருக்கு இருக்கவில்லை. ஏராளமாகப் பணம் இருந்தும் தாராளமாகப் பழகும் பண்பு அவரிடம் இருக்காததுதான் காரணம். இவருக்கு பதினெட்டும் நிரம்பாத ஒரு பருவமகள் இருந்தாள்.

'கொழும்பு ஆனந்தா கலவன் பாடசாலை'யில் க. பொ. த. வகுப்புப் படித்துக்கொண்டிருந்தாள் செல்வராணி.

சிவந்த மேனி, நலிந்த உடல், கொவ்வை இதழ்கள், கயல்மீன் விழிகள், கிளிமூக்கு, பவளவாய், மாதுழம்பழக் கன்னங்கள் இவைகள் எல்லாம் ஒருங்கே அமையப்பெற்றவள்தான் சரவணமுத்துவின் ஒரே மகள் செல்வராணி.

நீண்டு திரண்டு கிடக்கும் கருங்கூந்தலை வாரிப் பின்னிவிட்டுக்கொண்டு, வட்டக்குடை பிடித்து, குதி உயர்ந்த செருப்பால் நடந்து பாடசாலைக்குச் சென்றுகொண்டிருக்கும் செல்வராணியைப் பார்த்தால், அவள் ஒரு பள்ளி மாணவி என்று யாரும் இலகுவில் கூறிவிட மாட்டார்கள். அவள் ஒரு பட்டதாரி ஆசிரியை என்றே கூறுவார்கள். அவ்வளவு எடுப்பான, நடப்பான, வசீகரமான தோற்றம் உடையவள் அவள்.

செல்வராணி பாடசாலை எல்லைக்குள் நுழைந்துவிட்டால், தன் அந்தஸ்திற்குத் தராதரமான மாணவ மாணவிகளுடனேயே பழகுவாள். மற்றவர்களுடன், ஏன்? தனது வகுப்பு மாணவ மாணவிகளுடனேயே சரியாகப்பழகமாட்டாள். பணக்காரன், பிச்சைக்காரன்; உயர்ந்த சாதி, குறைந்த சாதி என்ற பாகுபாட்டு எண்ணமுடையவள் அவள். இத்தனைக்குங் காரணம், தான் ஒரு செல்வந்தரினதும், தலைமை ஆசிரியரினதும் மகள் என்ற குறுகிய மனப்பான்மைதான்.

'கொழும்பு ஆனந்தா கலவன் பாடசாலை' யில் க. பொ. த. வகுப்பு முதலாண்டு முடிவடைந்து இரண்டாம் ஆண்டு ஆரம்பமாகியது. இரண்டாம் ஆண்டுப் படிப்பிற்காகப் புதிதாகச் சேர விண்ணப்பித்த மாணவ மாணவிகளுக்கு, நடாத்தப்பட்ட பரீட்சையில் பதினைந்து மாணவ மாணவிகள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். இவர்களுள் மட்டக்களப்பில் இருந்து சென்ற அரவிந்தனும் ஒருவன்.

துரைநாயகம் ஊரிலேயே நல்ல பெயருடன் விளங்கும் ஓர் ஏழை விவசாயி. இவருடைய வீடு 'மட்டக்களப்பு ஆண்கள் பாடசாலை'த் தலைமை ஆசிரியருடைய இரண்டு அடுக்கு மாடிவீடு அமைந்துள்ள வளவிற்கு அடுத்தாற்போல் உள்ள வளவில் அமைந்திருந்தது. துரைநாயகத்திடம் கல்வி அறிவு இல்லாவிட்டாலும் பகுத்தறிவு இருந்தது. பணம் இல்லாவிட்டாலும் பண்பு நிறைய இருந்தது. இந்தத் துரைநாயகக்

தின் மகன்தான் 'கொழும்பு ஆனந்தா கலவன் பாடசாலை'யில் இரண்டாம் ஆண்டுப் படிப்பிற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களுள் ஒருவனான அரவிந்தன்.

க. பொ. த. இரண்டாம் ஆண்டு வகுப்பில் எல்லா மாணவ மாணவிகளும் கவனமாகவும், பொறுப்புணர்ச்சியுடனும் கல்வி பயின்று வந்தார்கள். ஆனால் ஒரு ஜோடி மாணவ மாணவி மாத்திரம் போட்டி போட்டுக்கொண்டு படித்தார்கள். அவர்கள் இருவரும் வேறு யாருமல்ல, அரவிந்தனும் செல்வராணியும்தான்.

முதலாந் தவணைப் பரீட்சையில், பௌதீகம், உயிரியல் ஆகிய இரண்டு பாடங்களில் அதிக புள்ளிகளை அரவிந்தனும்; இரசாயனம், தாவரவியல் ஆகிய இரண்டு பாடங்களில் அதிக புள்ளிகளைச் செல்வராணியும் பெற்றார்கள்.

பரீட்சை முடிவை அறிந்த செல்வராணியின் உள்ளத்தில் பொறாமை என்னும் நோய் குடிகொண்டது.

"இத்தனை ஆண்டுகளாக நான் இப்பாடசாலையில் படித்துவருகிறேன். ஒரு வகுப்பிலாவது, ஏன்? ஒரு பாடத்திலாவது, ஒரு மாணவ மாணவிகூட என்னைவிட அதிக புள்ளிகள் எடுத்து என்னைத் தோற்கடிக்கவில்லை. ஆனால், இப்பொழுதோ! என் ஊரையே தன் ஊராகக் கொண்ட ஒரு ஆண்மகன் வந்த வரத்திலேயே, இரண்டு பாடங்களில் அதிக புள்ளிகளை எடுத்து

என்னைத் தோற்கடித்துவிட்டான்.'' இவ்வாறு நினைத்து அவள் உள்ளம் பொருமியது.

போட்டியும் பொருமையும் ஒருங்கே சேர, இரண்டாந் தவணைப் பரீட்சையில் அதிக புள்ளிகளை எடுத்து அரவிந்தனைத் தோற்கடிப்பதற்காக வெகு மும்முரமாகப் படித்தாள் செல்வராணி. முடிவு! இரண்டாம் தவணைப் பரீட்சையில் பௌதீகம், இரசாயனம், உயிரியல், தாவரவியல் ஆகிய நான்கு பாடங்களிலும் அதிகமான புள்ளிகளை எடுத்து அரவிந்தனால் தோற்கடிக்கப்பட்டாள் செல்வராணி.

நான்கு பாடங்களிலும் தன்னைத் தோற்கடித்த அரவிந்தனுக்குச் சரியானபாடம் புகட்ட விரும்பினாள் செல்வராணி.

எனவே; ஒரு வெள்ளைப் பேப்பரில், சாகசமாகப் பேசி அரவிந்தனின் கையொப்பத்தை வேண்டி எடுத்தாள். அதில், அரவிந்தன் தனக்கு எழுதுவதுபோல் ஒரு கடிதத்தையும் எழுதிஎடுத்தாள். பின், அக்கடிதத்தை, அரவிந்தன் தனக்கு அனுப்பியதாகக் கூறி தலைமை ஆசிரியரிடம் ஒப்புவித்தாள்.

தலைமை ஆசிரியர் கடிதத்தைப் பிரித்துப் படித்தபின் அரவிந்தனை அழைத்து விசாரித்தார்.

இக்கடிதத்தை நீதானே எழுதினாய் அரவிந்தன்?

''எந்தக் கடிதத்தை சார்?''

"உனக்கே தெரியவில்லையா?"

இதோ பார் என்று கடிதத்தை அரவிந்த னிடம் கொடுத்தார்.

கடிதத்தைப் பார்த்த அரவிந்தன் பதறிப் போய்விட்டான்.

"இக்கடிதத்தை நான் எழுதவில்லை சார்."

"கடிதத்தின் கீழே இட்டிருப்பது உன்னு டைய கையொப்பம்தானே!"

"ஆமாம் சார்!"

அப்போ கடிதத்தை யார் எழுதியது?

கையொப்பம் என்டையதுதான். ஆனால் கடிதத்தை நான் எழுதவில்லை சார்.

கடிதத்தை "வேறொருவரிடம் கொடுத்து எழுதி எடுத்துக்கொண்டு, நீ கையொப்பம் மட்டும் இட்டு அனுப்பியிருக்கிறாய்! இல்லையா?"

அரவிந்தன் பதில் ஏதும் கூறாமல் மௌன மாக நின்றான். முடிவு! அரவிந்தன் பாடசாலையி லிருந்து விலக்கப்பட்டான்.

பாடசாலையை விட்டு வீட்டிற்கு வந்த அர விந்தன், தனிப்பட்ட முறையில் பரீட்சை எடுப் பதற்கு விண்ணப்பித்துவிட்டு இராப்பகலாகக் கவனமாகப் படித்தான்.

நாட்கள் உருண்டோடியது பரீட்சை நெருங் கியது.

பாடசாலைகளில் பரீட்சைக்காக ஒரு மாத கால விடுமுறை விட்டார்கள். அந்த ஒரு மாத கால விடுமுறையை அனுவசியமான காரியங்களில் ஈடுபடுவதில் வீணுக்காமல், பயனுள்ள முறையில் பயன்படுத்துவதற்காகப் பிறந்த இடத்திற்குத் திரும்பினுள் செல்வராணி.

வழமைபோல் ஒருநாள் காலை அரவிந்தன் படித்துக்கொண்டிருக்கும் பொழுது வெளியே யாரோ இரண்டு மனிதர்கள் பேசுவது கேட்டது. சில விஞடிகள் அவன் படிப்பை நிறுத்திவிட்டு பேச்சைக் கவனித்தான். பேச்சிலிருந்து அது தனது தந்தையும், அடுத்த வளவுப் பெரிய மனிதரும்தான் என்பதைத் தெரிந்துகொண்டு திரும்பவும் படிக்கலாஞன். சில நிமிடங்களின்பின் தந்தையும், அடுத்த வளவு மனிதரும் சற்று உரத்த குரலில் வாக்குவாதப் படுவதுபோல் இருந்தது. இடையிடையே ஒரு பெண்ணின் குரலும் கேட்டது. பெண்ணின் குரலை உற்றுக் கவனித்தான். எங்கோ கேட்டுப் பழகிய குரல்போல் தென்பட்டாலும் சரியாக யாருடைய குரல் என்று கண்டு பிடிக்க முடியவில்லை. புத்தகத்தை மூடிவைத்து விட்டு வெளியில் வந்து பார்த்தான்.

தனது தந்தையுடன் பேசிக்கொண்டு நின்ற அடுத்த வளவு மனிதருக்காகப் பரிந்து பேசிக்கொண்டிருந்த பெண்மணியைக் கண்டதும் அரவிந்தன் அதிர்ந்துபோய்விட்டான். அவனுடைய கண்களை அவஞலேயே நம்ப முடியவில்லை.

அவள் வேறு யாருமல்ல. கல்லூரியில் அவனுடன் போட்டிபோட்டுப் படித்துத் தோல்வி அடைந்த செல்வராணியேதான்.

அரவிந்தனைக் கண்டதும் வாயடைத்து அமைதியாக நின்றிருந்தாள் செல்வராணி.

அரவிந்தன் தந்தையிடம் சென்று என்னப்பா வாக்குவாதம்? என வினவினான்.

என்ன! தந்தையா? அப்போ, நீ துரைநாயகத்தின் மகனா? என்றாள் செல்வராணி ஆச்ரியப் பட்டவாறே.

ஏன்? ஆச்சரியமாக இருக்கிறதா? என்றான் அரவிந்தன் பதிலுக்கு.

இல்லை, கேட்டேன் என்று மழுப்பினாள் செல்வராணி.

சிறிதுநேர மௌனத்திற்குப் பின், மௌனத்தைக் கலைத்துக்கொண்டு, இதோ பார் அரவிந்தன், 'அவ்விடத்தில் இருந்த எல்லைக்குப் பதில் ஓரடி தள்ளி இவ்விடத்தில் எல்லை போட்டார். அதுக்குத்தான், ஏன் இப்படிப் போடுகிறீர்கள்? அதோ இருக்கிறது எல்லை' என்றேன். அதற்குத் தான் 'எல்லை உனக்கே தெரியவில்லையா? ஊர் சொத்தைக் கொள்ளை அடிக்கலாம் என்று பார்க்கிறாயா?' என்று தாறுமாறாகப் பேசினார். அவருக்குத் துணையாக அவருடைய மகளும் வந்து சேர்ந்துகொண்டாள். இதுதான் வாக்குவாதம் என விளக்கினார் துரைநாயகம்.

'ஆமாம்! அதுதானே எல்லை. இங்கே எப்படி வந்தது?' என்று ஒரு ஏவுகணையை விட்டான் அரவிந்தன்.

'உங்களுடன் பேசிப் பயனில்லை. பெறவேண்டிய வழியில் பெற்றுக்கொள்ளுகிறேன்' என்று பதில் ஏவுகணையை விட்டுவிட்டுச் சென்றுவிட்டார் ஆசிரியர் சரவணமுத்து.

பிற்பகல் மூன்று மணியளவில், இரண்டு பொலீஸ் ஜவான்கள் வந்து, ''ஆசிரியர் சரவணமுத்துவின் வீட்டில் திருட்டு நடந்ததாகவும், அவர் உங்கள் மேல் சந்தேகப்படுவதாகவும் புகார் கொடுத்திருக்கின்றார். எனவே, அதன் பேரில் உங்களைக் கைது செய்கிறோம்'' என்று கூறித் துரைநாயகத்தைக் கைது செய்து பொலீஸ் நிலையத்திற்குக் கொண்டுசென்றார்கள்.

தந்தையைப் பொலீசார் கைது செய்து கொண்டு போனதால், அரவிந்தன் அதிர்ந்து போய் உட்கார்ந்திருந்தான்.

துரைநாயகத்தைப் பொலீசாரிடம் சிக்க வைத்துவிட்ட மகிழ்ச்சியில் திளைத்துக்கொண்டிருந்தார் ஆசிரியர் சரவணமுத்து.

வழமையாக நீலமாகக்காணப்படும் வானம் அன்று காலையிலிருந்தே மப்புடன் காணப்பட்டு மழை பெய்ய ஆரம்பித்தது. சிறிதுநேர மழைக் குப்பின் மெல்லிய காற்றும் சேர்ந்துவீச ஆரம்பித்தது. நேரம் செல்லச் செல்ல மழை அதிகரித்துக்கொண்டே இருந்தது. மழையுடன் [illegible]

அதிகரித்துக்கொண்டே இருந்தது. சில மணி நேரங்களின் பின் பெரிய ஊதல் சத்தத்துடன் காற்று வீச ஆரம்பித்தது. அவ்வேளையில், மரங்கள் முறிந்துவிழும் ஓசைகளும், பறவைகளின் அலறல் ஓசைகளும் வானை அளாவின.

திடீரென ஒரு மரம் விழும் ஓசையைத் தொடர்ந்து ''ஐயோ அப்பா? காப்பாற்றுங்களேன்'' என்று ஒரு பெண்ணின் அவலக்குரல் கேட்டுத் தன்நிலைக்கு வந்த அரவிந்தன் வெளியே சென்று பார்த்தான்.

ஆசிரியர் சரவணமுத்துவின் வீட்டை அடுத்து நின்றிருந்த 'வாகை' மரம் ஆசிரியரின் இரண்டு அடுக்கு மாடுவீட்டை அணைத்தபடி விழுந்து கிடந்தது. அவலக்குரல் செல்வராணியுடையதுதான் என்பதை ஊகித்தறிந்து கொண்டு, கொட்டும் மழையையும், வீசும் புயலையும் பாராமல் ஆசிரியர் சரவணமுத்துவின் வீட்டை நோக்கிப் பாய்ந்தோடினான்.

அங்கே, மயக்கமுற்ற நிலையில் கிடந்த சரவணமுத்துவையும், அவருக்குப் பக்கத்தில் துவண்டுகிடந்த செல்வராணியையும் தூக்கி எடுத்து இரண்டு தோள்களிலும் சுமந்து கொண்டு தன்னுடைய வீட்டை நோக்கி வேகமாக நடந்தான்.

வீட்டில் முதல் வேலையாக ஆசிரியர் சரவணமுத்துவுக்கும், அவர் மகள் செல்வராணிக்கும் [illegible] தெளிவித்து காயங்களுக்கு மருந்து கட்

டினன். பின் அவர்கள் இருவரையும் நிம்மதியாகத் தூங்க விட்டுவிட்டு, வெளிவராந்தாவில் வந்து படுத்துக்கொண்டான். களைப்பின் காரணமாகச் சிறிது நேரத்தில் கண் அயர்ந்துவிட்டான் அரவிந்தன்.

அதிகாலையில் ஆசிரியரும், மகளும் எழுந்திருக்குமுன்பாகவே எழுந்து தன் பாடங்களைப் படிக்க முற்பட்டான். சிந்தனை வேறு எங்கெங்கோவெல்லாம் சென்றபடியால், இரவு புயல் அடித்ததே; நிலைமை வெளியில் எப்படி இருக்கிறது என்று பார்த்துவரப் புறப்பட்டான்.

வீட்டை விட்டு வெளியில் வந்ததும், அவன் கண்ட முதல் காட்சியை அவனலேயே நம்ப முடியவில்லை.

சரவணமுத்துவின் இரண்டு அடுக்கு மாடி வீடு மரம் விழுந்ததனல் இடிந்து தரைமட்டமாகக் கிடந்தது. திரும்பிப் பார்த்தான்; எல்லா இடமும் ஒரே வெட்டவெளியாகத் தென்பட்டது.

தெருவிற்குச் சென்று, புதினம் பார்த்துவரச் சிறு தொலைவு தூரம் சென்றன்.

தெருவில் மரங்களும், மின்சாரக் கம்பிகளும், மின்சாரத் தூண்களும் தாறுமாருக விழுந்துகிடந்தன. சில மரங்கள் வீடுகளைக் கட்டி அணைத்து முத்தம் இடுவதுபோல் வீழ்ந்திருந்தன. சில வீடுகளின் மேற்கூரைகள் அங்கங்கு காணப்படவில்லை. தகரவீடுகளின் தகரங்கள்

கசக்கிப்போட்ட கடதாசி மாதிரி சுருண்டு வளைந்து கிடந்தன. ஓட்டு வீடுகளின் ஓடுகள் புயலில் பறந்து விளையாடியதைப்போல் நாலா பக்கமும் சிதறிக்கிடந்தன. ஆடு, மாடு, கோழி, நாய் முதலிய வீட்டுப் பிராணிகள் ஏராளமாக மாண்டு மடிந்துகிடந்தன. ஓரிரண்டு வீடுகளே சேதப்படாமல் தப்பித் தவறிக் கிடந்தன. சுருங்கச் சொன்னால் மட்டக்களப்பு நகரமே சிதைந்து வெறிச்சோடிக் கிடந்தது.

இவைகளை எல்லாம் பார்த்துப் பரிதாபப் பட்டபடி வெகுதூரம் சென்றுவிட்டபடியால் நேரம் போனதே தெரியவில்லை. உடனே, வீட்டை நோக்கித் தனது நடையைத் திருப்பினான் அரவிந்தன்.

அரவிந்தன் வீட்டை அடையவும் ஆசிரியர் கண் விழிக்கவும் சரியாக இருந்தது.

அரவிந்தன் ஆசிரியர் சரவணமுத்துவை அணுகி வினவினான்.

"உடம்பு எப்படி இருக்கின்றது?"

"அது சரி; இப்போ நான் எங்கே இருக்கிறேன்?"

"என்னுடைய வீட்டில்தான் இருக்கிறீர்கள்."

"நான் எப்படி இங்கே வந்தேன்?"

"நீங்கள் மட்டுமல்ல உங்கள் மகளும் இங்கேதான் இருக்கிறாள்."

''அதுதான் எப்படி இங்கே வந்தோம்?''

''இரவு வெகு நேரத்திற்குப் பின் 'ஐயோ அப்பா! காப்பாற்றுங்கள்' என்ற உங்கள் மகளின் அவலக்குரல் கேட்டு வெளியேவந்து பார்த்தேன். உங்கள் வீட்டிற்குப் பக்கத்தில் நின்றிருந்த 'வாகை' மரம் உங்கள் வீட்டின்மேல் விழுந்துகிடந்தது. உடனே உங்களுடைய வீட்டிற்கு வந்து, கதவுகள் தாளிடப்பட்டிருந்தபடியால் இடிந்த சுவரின் வழியாக ஏறிக்குதித்து, இடிந்து விழுந்து கிடந்த ஓர் சுவரின் அருகில் இரத்தக் கறைகளுடன், மயக்கமுற்ற நிலையில் கிடந்த உங்களையும், உங்களுக்குப் பக்கத்தில் துவண்டு கிடந்த உங்கள் மகளையும் தூக்கிக் கொண்டுவந்தேன்.''

ஆசிரியர் சரவணமுத்து நன்றி உணர்வுடன் அரவிந்தனை நோக்கிவிட்டு; தன் மகள் பக்கம் திரும்பினார். அவள் விழி கலங்க நின்றுகொண்டிருந்தாள்.

அரவிந்தன் தொடர்ந்தான்.

''அன்றொரு நாள் பாடசாலையில் நான் நான்கு பாடங்களிலும் கூடிய புள்ளிகள் எடுத்ததற்காக உங்கள் மகள் திறமையாக ஒரு நாடகத்தைத் தயார்படுத்தி நடித்து என்னைப் பாடசாலையினின்றும் நீக்கினாள். நேற்று ஒரடி நிலத்

திற்காக வாதாடிய என் தந்தையை நீங்கள் சிறையில் அடைப்பித்தீர்கள். இன்று அவருடைய மகன்தான் உங்கள் இருவரினதும் உயிரைக் காப்பாற்றியிருக்கிறான். அவருடைய வீடுதான் உங்களுக்கு இருக்கத் தஞ்சம் அளித்தது. பணம் மட்டும் இருந்தால் போதுமா? பகுத்தறிவு வேண்டாமா?.........

அரவிந்தன் பேசிக்கொண்டேபோனான்.

ஆசிரியரினதும், செல்வராணியினதும் கண்களிலிருந்து கண்ணீர் சரமாரியாகப் பொழிந்தது.

# விடிவெள்ளி

"நவாலியூர் நடேசன்"

அல்லிக் குளக்கரை யோரத்திலே — அந்தி
அழகைப் பருகிடும் நேரத்திலே — ஒரு
வல்லிக் கொடியொன் றசைந்ததுவே — அவள்
வானத்துப் பெண்ணோ நானறியேன்!

நீர்க்குடந்தாங்கி இடை துவள — இரு
நீள்வடப் பின்னல் சுழன்றுவர — காதல்
பார்க்கும் விழிகளில் தேங்கிவர — அம்பு
பாய்ச்சினள் தோளில்! மயங்கிவிட்டேன்!

செந்தேன்மாரி பொழிந்து நின்றாள் — பின்பு
சோகமுற விட்டுச் சென்றுவிட்டாள் — இன்னல்
காந்த மொழியால் மயக்கிவிட்டாள் — என்
கருத்தில் நல்லுறவாகி விட்டாள்.

வளரும் இருள்என் வாழ்வினிலே — விடி
வெள்ளியாகி முளைத்து விட்டாள் — இனி
கிளரும் உள்ளக் காதலினால் — இரு
கிளிகளாகிப் பறந்திடுவோம்!

# கார்மேகம் குழலே என்றான்

— எஸ். பி. அந்தோனிப்பிள்ளை —

முல்லையவள் பற்களென்றால் முகையரும்பி
    முகத்தில்வீற் றிதழ்பரப்பக் காரேவேண்டும்
பல்லையொளி முத்தென்றால் பரவைமூழ்கிப்
    படிமண்ணில் விளைந்திடவும் காரேவேண்டும்
'இல்லை' இடை கொடியென்று கூறிற்றாலும்
    எழிற் கொடியும் தளிர்த்துவரக் காரேவேண்டும்
பல்வளமும் குறைவின்றிச் செழிப்பதற்கே
    பார்காக்கும் கார்மேகம் குழலே என்றான்.

கயல்மீன்கள் வாழ்ந்திடப்பங் கயம்வளர்ந்து
    கார்வண்டை அழைத்துமது விருந்தளிக்க
வயலாடும் காந்தன்மலர் கரத்திலாட
    வாழைமரம் வனிதைகளின் காலாய்நிற்க
அயலாடும் தோகைமயில் அகம்களிக்க
    அத்தனையும் ஆக்கிடக்கார் வேண்டுமென்று
புயற்காற்றை மழையாக்கிப் பூக்களாக்கும்
    புவிகாக்கும் கார்மேகம் குழலே என்றான்.

தக்காளிக் கன்னம்மாந் தளிர்பழங்கள்
    தருகொவ்வை மாதுளைகள் தென்னம்பாளை
அக்கான அளிகரவு அறியாமான்கள்
    அன்னங்கள் அகவுமயில் பேசுங்கிள்ளை
இக்கால மென்பட்டு இலவம்பஞ்சு
    ஈடில்லாத் தேன்சொரியும் பூக்களெல்லாம்
திக்கெல்லாம் வாழ்ந்திடவே தீனியூட்டும்
    [illegible] குழலே என்றான்.

# தூங்கவா போகிறாள்

— செல்வி. வி. விஜயலெட்சுமி —

கடல் முட்டும் ஓரத்தின் அழகு — செந்தணல்
காட்டும் வானத்தின் பசுமை
மடல் குவியும் வேளையின் அமைதி — அந்தி
மாலைப் பொழுதிலோர் இன்பம்

அலைமுட்டும் மலைக்குன்றில் நான் — என்
அன்புக் கரசியோ என்னருகில்
தலை சாய்த்து என்னுடலில் அணைகிறாள் — நான்
தவிக்கிறேன் அவளன்புச் சுமையினால்

தீராத நோய்தானோ காதல் — அன்புத்
தீன் சுவைப் பெருக்கத்தின் விளைவால்
மாறாத அன்பென்று மொழிகிறாள் — நங்கை
மலைக்கிறேன் அவளின்பச் சொல்கேட்டு:

இனி நீ வேறு நான்வேறு கண்ணே — நம்
ஈருயிரும் ஒருயிர் உடல்தானிரண்டு
கனி கின்ற இன்பமொழி பேசு — அன்பே
காதல் என்றால் இதுவல்லோ காதலென்று.

மொழிகிறேன் அவள் முகமோ — நாண
மோன நிலையடைகிறதே வெட்கந்தானோ
விழி மூடித் தூங்குகிறாள் என்மடியில் — பொழுது
விடியும் வரை தூங்கவா போகிறாள்.

—"ஆமாம்! நானும் அப்படியொரு கொடியைத்தான் தேடிவந்தேன்..."

"பிரண்டை"

"இல்லை. இது சாவாமருந்து. மனிதனை மரணத்திலிருந்து மீட்கும் அருமருந்து..."

"என்ன சாவாமருந்தா?..."

# சாவாமருந்து

—செல்வி. எஸ். ராஜம் புஷ்பவனம்.

நீலக்கடலின் அலைக்கரங்கள் கரையிலுள்ள கற்களில் வெண்ணுரையையடித்து மகிழ்ந்தது. சீதளத் தென்றல் குச்சவெளிக் கடற்கரையில் களிநடம் புரிந்தது. திருமலையிலிருந்து பத்துப் பதினைந்து மைல்களுக்கப்பால் உள்ள இடம் குச்சவெளி. பல்லாண்டுகளுக்குமுன் வெள்ளையர் கட்டிய அழகிய கண்ணாடிக் கட்டடங்கள், இந்திரலோகமெனத் திகழ்ந்தாலும் நடுக்கடலின் வலம்புரிச்சங்கென பிறர் றியாவண்ணம் அமைந்திருந்தது. கடற்கரையோரக் கல்லில் [illegible] ஸ்பார்க். அவர் அமெ

ரிக்க ஆராய்ச்சியாளர். தன் நண்பரும், குச்ச வெளியில் செல்வந்தருமான சதாசிவத்தின் இல்லம் தங்கி ஆராய்ச்சி செய்துகொண்டிருந்தார். ஜன நடமாட்டம் குறைந்த, காட்டுப்பிரதேசம் அவர் ஆராய்ச்சிக்குரியது போலும். என்னைக் கண்டதும் புன்னகையுடன் வரவேற்ருர். அவர் இலங்கை விஜயத்தின் போது உதவியாக இருப்பது நான்தான்.

அருகே கிடந்த இன்னொரு பாறையில் அமர்ந்தேன். அருகே கிடந்த பிரண்டைக்கொடியில் என் கண்கள் நிலைத்தன.

"அது மூலிகைகளில் ஒன்று" என்ருர் ஸ்பார்க்.

"ஆமாம்! நீங்கள் தாவர ஆராய்ச்சிக்காகத் தானே இலங்கை வந்தீர்கள்" என்றேன்.

"ஆம்! மூலிகைகள் தானே விஞ்ஞான மருந்தின் மூலப் பொருள்"

"இது பிரண்டை தானே"

"ஆம். அதில் மனித உடலிற்கு தேவையான சத்து பல இருக்கிறது"

"அது உண்மை. தமிழர் இதன் மகத்துவத்தை ஏற்கனவே அறிந்து வைத்துள்ளார்கள். சாரையும், இலையையும் பயன்படுத்துகிருர்கள். வேரைப் பொடித்து தேனில் நிதம் உண்டு வந்தால் நூறு வயதுவரை வாழலாம் எனவும் கூறுகிருர்கள்" என்றேன் பெருமிதமா...

ஸ்பார்க், தன் நீலவிழிகளை நீலக்கடலின் மேற்பரப்பில் பதியவிட்டுச் சிந்தனையிலீடுபட்டார். மௌனம் கலைய மெதுவாகக் கூறினார்.

''ஆமாம்! நானும் அப்படியொரு கொடியைத் தேடித்தான் வந்தேன்''

''பிரண்டை!''

''இல்லை. இது சாவாமருந்து! மனிதனை மரணத்திலிருந்து மீட்கும் அருமருந்து''

''என்ன சாகாமலா?'' அதிர்ச்சியுடன் கேட்டேன்.

''ஆம்! நான் இந்த ஆராய்ச்சியில், ஈடுபட்டு இருபது இருபத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாகின்றன. இன்னும் நான் தேடுவதைக் காணவில்லை''

''மனிதரை உயிரோடு வைக்கக்கூட தாவரம் உண்டா? எப்படி இந்த ஆராய்ச்சியிலீடுபட்டீர்கள்?''

''ஆமாம் மனிதரை வாழவைக்கலாம்! இந்த ஆராய்ச்சி பல ஆண்டுகளுக்கு முன் நடந்தது. அன்று என் நண்பன் இருந்தான்''

இருபத்தைந்தாண்டுகளுக்கு முன் ஒருநாள். சான்பிரான்ஸிஸ்கோ துறைமுகத்திலிருந்து புறப்பட்ட கப்பலில் மேல் தளத்தில் நின்றவாறே பசுபிக் கடலினை நோக்கிக் கொண்டிருந்[illegible] என் கப்பலின் பின்னால் சான்பிரான்

ஹிஷ்கே நகரம் மெல்ல மெல்லச் சிறுத்துப் புகை மூடியபடி ஒளியிழந்து கொண்டிருந்தது. அவன் தாவர சாத்திரி. எந்நேரமும் கார்ணலஸ்லினே யஸ்ஸின் புத்தகமான ஸிஸ்டமாநேசுரேயை வாசித்துக் கொண்டிருப்பான். அவன் எப்போதும் ஒரு வார்த்தை கூறுவதுண்டு. மனிதனை ஆயிரம் ஆண்டு வாழவைக்க வேண்டும் என்பது தானது. பசுபிக் சமுத்திரத்தில் தென்திசை நோக்கி எங்கள் கப்பல் போய்க்கொண்டிருந்தது. கப்பல் கப்டன் எங்களிடம் வந்தார்.

''இளைஞர்களே! நீங்கள் ஆராய்ச்சிக்காக இறங்கத்தான் போகிறீர்களா?சோர்ந்து மேசை மீது அமர்ந்திருக்கும் ஸ்டிபன் துள்ளினன்.

''என்ன இது?நாங்கள் ஆராய்ச்சிக்காகக் கிளம்பிவிட்டோம். அது முடிந்தே திரும்புவோம். இப்படித் தடுப்பது முறையல்ல காப்டன்'' ''உங்கள் ஆராய்ச்சி வெற்றி பெற வேண்டும். ஆனல் போகுமிடம் நல்லதல்ல: நான் முப்பதாண்டுகளாக இந்தப் பசுபிக் சமுத்திரக் கப்பல் கப்டனுக இருக்கிறேன். தென் பசுபிக் நாடுகளிற்குக் கொண்டு செல்லும் பொருட்களை ஏற்றிச் செல்வது இந்தக் கப்பல். நீங்கள் கூறும் அந்தத் தென் பசுபிக் தீவுகளில் மனித வாடையிருப்பதையே அறியவில்லை. அங்கு மனிதர் இருக்கும் அடையாளமேயில்லை. நான் உங்கள் முயற்சிக்குக் குறுக்கே வரப்போவதில்லை, ஆனல் வரும் ஆபத்தைக் கூறிவைப்பது நல்லதென எண்ணுகிறேன்.''

கப்டன் பேசுவதை ஸ்டீபன் கேட்டுக் கொண்டிருந்துவிட்டுப் புன்னகையுடன், பசுபிக்கின் நீரலைகளைப் பார்த்தபின் புத்தகத்தில் ஒன்றிடுவான். சில வேளைகளில் ஸ்டீபன் தன் ஆராய்ச்சியைப் பற்றிய விவாதத்தில் இறங்கி விடுவான். இந்த விவாதம் கப்டனுக்கு சுவையானதாய் இருக்கும். சில தினங்களில் எங்கள் கப்பல் அத் தீவுக் கூட்டத்தினருகே நெருங்கியது. நாங்கள் எங்கள் "ஸ்டீம் போட்"டில் தேவையான பொருட்களை ஏற்றிக் கொண்டுப் புறப்பட்டோம். நாங்கள் ஒரு தினத்தைக் குறிப்பிட்டு, அன்று வெண்கொடி காட்டினால் கப்பல் எங்களுக்காக நிற்கவேண்டும் எனக் கூறினோம். ஏதும் ஆபத்து ஏற்பட்டாலும் வெற்றுப் போத்தலில் எங்கள் முடிவு உலகத்திற்குத் தெரிவிப்பதாகக் கூறி விடைபெற்றுத் தீவை நோக்கிப் படகைச் செலுத்தினோம்.

கரையை அடைந்ததும் படகை நிறுத்தி விட்டுத் தீவில் காலடி எடுத்து வைத்தோம். அடர்ந்த காடுகள் மண்டியிருந்த அத்தீவில் சன நடமாட்டம் இருப்பதாகவே அறிகுறி எதுவும் இல்லை. வெறும் சூனிய பூமிபோல் காட்சியளித்தது.

"இக்கரையில் டென்ட் போடுவோமா?" என்றேன் நான். அவன் மெதுவாக "உனக்கு எப்போதும் அவசரந்தானா? தீவுக்குள் சென்று பார்த்து வருவோம். முதலில் நமக்கு வரும் ஆபத்தை எதிர்க்கத் தைரியமாக
[illegible]" அதுவும் உண்மைதான்

காற்றுமழை — இவைகளை டென்ட் தாங்காது, எனவே ஒரு குகையைத் தேடுவோமா?'' என்றேன்.

''சரி'' என்றவாறு தன் இரட்டைகுழல் துப்பாக்கியோடு காட்டுள் நுழைந்தான். நானும் நண்பனைப் பின் தொடர்ந்தேன். சற்றுத் தூரம் குன்றுகளாக அமைந்து கிடந்த கற்பாறைகளைக் கண்டோம். பாறைகளினிடையே வளர்ந்து கிடந்த காட்டுக் கொடிகள் பாறைகளை மூடியும் மூடாமலும் கிடந்தன. கற்பாறை ஒன்றின் ஓரம் சிறு குகைவாயில் ஒன்று தென்படவே, துணிவுடன், ஆனால் மெதுவாக உள் சென்றான் ஸ்டீபன். அவனைத் தொடர்ந்து நான் சென்றேன். அக்குகையின் தரைப்பகுதி மட்டமாக இருந்தது. கற்கள் சில ஒரு சமமட்டப்பாறையில் கிடந்தன. அவை கற்கால மனிதர் பாவித்த கற்களாலான கத்தி-ஈட்டி போன்ற உருவத்தவை. அது எனக்கும், ஸ்டீபனுக்கும் பிரமிப்பை ஏற்படுத்தியது.

குகையின் ஒரு புறம் ஒரு கொடி படர்ந்து புதர் மண்டிக் கிடந்தது. அதைச் சுத்தப்படுத்தி அங்கே தங்க எண்ணினேன். ஸ்டீபன் அந்தக் கொடியையே உற்று நோக்கியவாறிருந்தான். நானும், வியப்பும், திகைப்பும் அடைந்தேன். அது போன்ற ஒரு கொடியை நாங்கள் எங்குமே கண்டதில்லை. அவன் அதைக் கரத்திலெடுத்து ஆராய்ச்சியிலீடுபட்டு விட்டான். நானும் கொடிகளை வாரி எடுத்தேன். ஏதோ தட்டுப்படவே கொடிகளைத் தூர விலக்கிவிட்டுப் பார்த்தோம். அது ஒரு மனித உடல். வியப்பு...

புரட்டிப் பார்த்தோம். நீண்ட தாடி புழுதி படிந்த தலைமயிர், நீண்டு வளர்ந்த நகங்கள் சுருண்டிருந்தன. கன்னக் குழிகளில் படிந்த தூசி கண் குழிகளில் மேவிநின்றது. நான் அவனை அணுகினேன். அவன் ஆராச்சியாளனு-இல்லை அவன் ஆராய்ச்சியாளனில்லை. சாட்சாத் கற்கால மனிதனே. இந்த உருவம் கற்கால மனிதனின் உருவம். ஆராய்ச்சியாளர் வந்ததற்கு அடையாளமில்லை.

என் மருந்துப் பெட்டிகளிலிருந்த சில மருந்துகளைக் கொண்டு நான் அவனுக்குச் சிகிச்சையளித்தேன், அவன் கைச் சுண்டு விரலில் என் பேனுக் கத்தியால் சிறிது அழுத்தவே, அது அசைவு கண்டது. என் மனம் குதூகலித்தது. ''ஸிஸ்டமாநேசுமே'' தாவரயியல் புத்தகத்தின் அத்தியாயங்களைப் புரட்டி புரட்டி ஆராய்ந்து கொண்டிருந்தான் ஸ்டீபன். எனக்குச் சற்று கோபம் வந்தது.

''ஸ்டீபன். ஆராய்ச்சிக்குத்தான் இங்கு வந்தோமென்றாலும் இப்போதைய சூழ்நிலையில் இம்மனிதனுக்கு முதல் சிகிச்சை அளித்தபின் தான் உன் ஆராய்ச்சியைத் துவக்க வேண்டும்'' என் கடுமையான வார்த்தைகள் எதுவும் அவன் காதில் ஏறவில்லை. அசையாத சிலை போல நின்றான். அவன் உதடுகள் அசைந்தன.

''இது புதுவிதக் கொடி இதற்குப் பெயர்......?''

''ஸ்டீபன். இம்மனிதன் இறக்கவில்லை. எத்தனையோ ஆண்டு காலமாக இக்கொடி அவன் உடலில் ஒட்டி அவனுக்கு வேண்டிய ஜீவஇரத்த ஓட்டத்தை நிறுத்தாமல் காப்பாற்றியிருக்கிறது. உடலும் கெடவில்லை. இருதயமும் நன்னிலையிலுள்ளது. எனவே ஜீவசஞ்சீவிதான் இதற்குச் சரியான பெயர்'' என்றேன்.

என் கருத்தை ஏற்றதற்கடையாளமாகப் புன்னகை புரிந்துவிட்டு மீண்டும் கொடியில் கண்ணைப் பதித்தான். என்வசமுள்ள புதிய ஊசிகளைக் கற்கால மனிதனுக்கு ஏற்றினேன். அவனிருதயத் துடிப்பு லேசாக இருந்து வரவர சமநிலைக்கு வந்தது. இரவும் பகலுமாக அவனருகேயேயமர்ந்து அவனுக்கு வேண்டிய பணிவிடைகளைச் செய்தோம். கடைசியாக அம்மனிதன் அசைந்து எழுந்தான். எங்களைக் கண்டதும் அதிர்ச்சியடைந்தான். மீண்டும் அவ்வதிர்ச்சி. அவன் இருதயத்தைத் தாக்கக்கூடாதே எனக்கவலையும் எங்களைப்பற்றியது. மீண்டு அவன் ஓடிவிடாதபடி கவனித்தோம். அவன் நாங்கள் கொடுத்த உணவைச் சாப்பிடவில்லை. பரபரவெனத் தரையைத் தோண்டிக் கிழங்குகளையும் அருகே கிடந்த இலைகளையும், பழங்களையும் சாப்பிட்டான். அவன் காட்டிய சைகையும் பாசையும் எங்களுக்குப் புரியவில்லை. ஆராய்ச்சியாளரான நாங்களே திகைத்தோம். அவனைக் கட்டிவைத்துக் கவனித்துக்கொண்டே எங்கள் ஆராய்ச்சியிலீடுபட்டோம். குறிப்பிட்ட தினம் வரவே எங்கள் ''ஸ்டீம்போட்டில்'' பொருட்களை ஏற்றினோம்.

அவனையும் ஏற்றினோம். கீழ்க் கோடியில் கப்பலின் புகையுடன் புகைக்குழாய் தெரிந்தது.

நாங்கள் அதைக்கண்டதும் எங்கள் படகை ஓட்டத் துவக்கினோம். கப்பலை நெருங்க இன்னும் ஐந்து மைல்கள் போகவேண்டும். வானத்தில் உர்டூர்... எனும் பெருஞ் சத்தம். அதைத் தொடர்ந்து தாழப் பறந்துவந்த ஆகாயவிமானம் சில குண்டுகளை எங்கள் படகிலும் பொழிந்தது. நான் கடலில் தூரத் தூக்கி எறியப்பட்டேன். படகு கடலில் ஆழ்ந்தது. ஆமாம் இரண்டாவது உலக மாயுத்தத்தின் கோரச் செயல் எங்கள் ஆராய்ச்சியையும், வியத்தகு அக்கொடியையும், என் நண்பனையும், கற்கால மனிதனையும் கடலுள் மறைத்துவிட்டது. நாங்கள் ஆராய்ச்சி நடத்திய தீவு ஜப்பானியர் ஆட்சிக்குட்பட்ட பகுதி. அப்பிரதேசத்தின் கடும் போர் எங்கள் ஆராய்ச்சிக்கு முடிவு கட்டியது. நான் கண் விழித்தபோது என் முன் கப்பல் கப்டன் நிற்கக்கண்டேன். "எங்கே என் நண்பன்?" எனக் கேட்டேன்.

அவர் தலை கவிழ்ந்தார். அவர் விழிகள் பனித்தன. நான் மீண்டும் சான்பிரான்ஸிஸ்கோ வந்தேன். என் மனம் மட்டும் பசுபிக் சமுத்திரத்தின் தென்கோடித் தீவில் இருக்கும். என் நண்பன் நினைவு அடிக்கடி வரும். "ஸ்டீபன் நீ எங்கே?" 1948-ல் மீண்டும் அத்தீவு சென்றேன். வெட்டவெளியைத்தான் கண்டேன். அந்த ஜீவசஞ்சிவி அங்கு இல்லை. ஆனால் ஒரு தாவரம் ஓரிடம் முளைத்தால் மீண்டும் எங்காவது பூமியில்

உண்டாகியிருக்கவே வேண்டும்... இந்த நம்பிக்கையில் ...நான் இவ்வாராய்ச்சியிலீடுபட்டேன். நான் இலங்கையில் இவ்வாராய்ச்சியைச் செய்து முடித்தபின் இந்திய இமயமலைச் சாரலுக்குச் சென்று ஈடுபடப்போகிறேன்...... என்று தன் கதையை முடித்தார். ஸ்பார்க்ஸ்.

''மிஸ்டர் ஸ்பார்க்ஸ்! உங்கள் அனுபவம் என்னைத் திகைக்க வைக்கிறது. அப்பப்பா! ஆராய்ச்சியாளர்கள் உயிரை எவ்வளவு திண்ணனாக மதிக்கிறார்கள்.'' என்றேன்.

''ஆம் இது சாதாரண விடயம்'' என்றார் அவர்.

''இந்த மூலிகையால் மனிதன் நீடுகாலம் உயிர் வாழலாம் இல்லையா.''

''ஆமாம் அதில் சந்தேகமில்லை.''

''உங்கள் ஆராய்ச்சி வெற்றிபெறட்டும். நானும் விடைபெறுகிறேன்'' என் நினைவில் ஸ்பார்க்ஸ் அனுபவம் பசுபிக் கடல்போல் பயங்கரமாகத் தோன்றியது. அவர் ஆராய்ச்சி வெற்றி பெற்றால் மாந்தர்களுக்கு அவர் அளிக்கும் பரிசு உயிர்ப்பரிசு!

# விரகதாபம்

"திருக்கோணமலைக்கவிராயர்"

இனிமை மொழிக்கு ஒரு வள்ளி — அவள்
இடையோ துரும்பைவிட ஒல்லி
தனிமை நினைவுகளை அள்ளி — எனை
கனவில் அழைத்த விடிவெள்ளி

உயிரில் கலந்த தமிழ்ப்பாவை — அவள்
உலகில் எனக்கு ஒருதாய்மை
உயிரின் களைபிடுங்கி நோவை — தந்து
உதறி எனை வெறுத்த பூவை.

அவளால் கவிஞனென ஆனேன் — என்றும்
அமைதி இது வரையும் காணேன்
சுவரால் குதித்துவிழப் போனேன் — என்னை
'சுலைகா' தடுத்தாள் மகன் ஆனேன்.

கவிதை குழையுதடி அன்பே — என்றன்
கண்ணீர் பெருகுதடி பெண்ணே
புவியில் மறைந்துவிடு முன்னே — என்னைப்
புதிதாய் அணிந்தெறிக கண்ணே.

துளிரில் இணைந்து உயிரானோம் — பின்னர்
தளிரில் நனைந்து சிலையானோம் — கால
வெளியில் ஒளிகுறைந்து போனேன் — இன்று
சுழியில் புரண்ட நிலையானேன்.

நெஞ்சில் பதிந்த இருவேல்கள் — அவை
நெஞ்சம் சிதைக்க வரும் ஏர்கள்
பிஞ்சு முகத்தின் ஒளி வேல்கள் — இவை
[illegible] எனக்கு எதிர்நேர்கள்

ஊடல் உனக்கு விளையாட்டு — உன்றன்
உருவம் எனது மனப்பாட்டு
பாடல் இசைக்க எனைக்கேட்பாய் — பின்பு
பலவாறெனைப் புகழ்ந்து தீர்ப்பாய்

கல்வி எனக்குச் சின்ன அம்மை — என்றும்
கவிதை எனையணைக்கும் திண்மை
செல்வி உனது சக்திஉண்மை — மலர்
சொரிந்தேன் — உணர்ந்தேன் — கவிவன்மை.

இன்றே எனக்கு மனையாட்டி — அவள்
இருளில் வழிநடத்தும் பாட்டி
உன்னை நினைந்து உருமீட்டி — முதல்
இணைந்தேன் இரு புதல்வர் சாட்சி.

நல்லோர் இதயமெங்கும் வாழ்க — அங்கு
நங்கை உனது பெயர் ஆள்க
பொல்லா எனைவிடுத்து வாழ்க — என்றும்
பொன்னாய்த் துலங்கி மண்ணில் வாழ்க.

## "தமிழமுதம்"

— மட்டுநகர் முத்தழகு —

கிழக்கினிலே! செங்கதிரோன் கண்விழிக்க;
கரம்விரித்தே! பறவைகளும் வாழ்த்திசைக்க;
உழவர்களின் மலைத்தோளில் கலப்பைதொங்க;
உத்தமர்கள் மனம்போலே! கதிர்வணங்க;

சுட்டெரித்த பகலவனும் பாய்விரிக்க;
சேர்ந்துசென்ற பசுவினங்கள் ஊர்ந்தசைய;
''மட்டுநகர் வாவியிலே! ''பல்லிசையால்''
மீன்பாடும் மெல்லிசையில் மனம்மயங்க

வட்டநிலா பாலில்மூழ்கிப் பள்ளியெழ
    வரவேற்கும் காதலிலே துள்ளியதன்
பொட்டுமலர்த் தேனிதழத் தொட்டணைக்க;
    பெற்றெடுத்த ஆழ்கடலும் ஆசிநல்க;

நடுநிசியின் அமைதியென்றே! ஊர்உறங்க;
    நடுவானில் நிலவுப்பெண் தேர்உறங்க;
விடுதியிலே! விருந்தருந்தத் திங்கள்வரும்;
    வீணையிசைத் தாலாட்டில் 'தென்றல்வரும்'

மடியினிலே! மழலைமொழித் தேன்குடிக்கும்
    மாதாவின் அணைப்பில் முத்த மழைதுளிக்கும்
''பாடுகின்ற குயிலினத்தின் குரலினிக்கும்
    பார்த்திருக்கும் மயிலினத்தின் காதினிக்கும்''

''மெய்சிலிர்க்கும் ஆட்டமதில் "இயலுதிரும்"
    மெய்மறந்து நிற்பதிலே! "நிலம்குளிரும்"
கையொலிக்கும் ஓசையிலே! ''சங்கொலிக்கும்''
    காற்றடித்து ஓய்ந்ததுபோல் ''முத்துதிரும்''

''யாழ்நூலைத் தந்தவரின் ஊர்விரியும்''
    யோகியொளிக் கதிர்பரப்பும் நிலத்தினிலே!
''தமிழகத்தில் மண்வளத்தைத் தந்துவாழும்''
    ''திருமுருகப்'' பெயரணிந்த எம்மவரும்''

வில்லெடுத்துத் தமிழ்வளர்க்கும் நம்மவரும்
    வித்தகரின் விழியொளியில் வாழ்பவரும்
''நெல்லெடுத்து உயிர்காத்த படையினரும்''
    ''நீதிநெறிச் செல்வர்களின் குரலொலியும்''

வில்லெறிந்த விசயனவன் ''காதில்கீதை''
    வீரத்தின் வேலாகத் தைத்ததுபோல்
சொல்லெறிந்து ''தமிழமுதைத்'' தாய்மைக்கீந்த
    ''செந்தமிழின் காவலரே! நீடுவாழ்க!''

—இருபத்தெட்டு வருடங்களாக இறுகிய பந்தம் இன்றேடு இருந்த இடம் தெரியாமல் தொலேந்தது. உன் வாழ்வு பரிநாசமாகப் போகட்டும்... என்று அவனைத் துரத்தியது அன்பின் குரல்.

அத்தான்! உங்கள் நல்வாழ்விற்கு என் வாழ்த்து. மகிழ்ச்சியோடு போய் வாருங்கள்... என்று அவனே வாழ்த்தியது பாசத்தின் குரல்.—

# பாசத்தின் குரல்

—செல்வி. செல்வேஸ்வரி நடராசா.

அன்று!

*சாவகச்சேரியிலுள்ள 'டிறிபேக் கல்லூரி'க் கட்டிடம் அதிரும்படி மாணவ மாணவிகள் ஆரவாரஞ் செய்து கொண்டிருந்தார்கள். தாவரவியல் படிக்கும் மாணவ மாணவிகள் தங்கள் ஆசிரிய ஆசிரியைகளுடன் கண்டிக்கு உல்லாசப் பிரயாணம் போகிருர்கள். பின்னர் அவர்களுடைய மகிழ்ச்சிக்குக் கேட்கவும் வேண்டுமா?*

*பஸ் புறப்பட்டது. மாணவர்களுடைய பாட்டொலி காதைப் பிளந்தது. எல்லாவற்றையும் பார்த்தபடி பஸ்ஸின் பின் ஆசனமொன்றில் அமர்ந்திருந்தாள் சுசிலா. ஒரு முறை பார்த்தால் பின் மீண்டும் நினைவைவிட்டு நீங்காத எடுப்பான முகம். வயதிற்கு மீறி வழவழப்பாக*

வளர்ந்திருந்த வாளிப்பான உடல். அந்த வாளிப்பான பொன்னுடலைச் சுற்றிப் புதுமெருகூட்டியவாறு மின்னிக் கொண்டிருந்த மஞ்சள் நிற "கடால்" வைல் சாறி. அந்த மஞ்சள் வைல் சாறிக்கு எடுப்பாக கறுப்புச்சோளியும், குதிரை வால் கொண்டையும் போட்டிருந்தாள் சுசிலா.

மௌனமாக வெளியுலக இயற்கையழகை ஊன்றி ரசிப்பதில் ஆழ்ந்திருந்த சுசிலாவின் கவனத்தை "ஏன் மிஸ்! இது ரூவான்வெலியா இல்லையா?" என்ற கேள்வி இவ்வுலகுக்குக் கொண்டு வந்து நிறுத்தியது. பஸ் நின்றது. சமாதியைச் சுற்றிப் பார்த்துக் கொண்டு வந்த அவர்களால் கைமுனு மன்னனின் கலாரசனையைக் கண்டு வியக்காமலிருக்க முடியவில்லை. சரித்திர ஆசிரியையான குணமணி அச்சமாதியைப் பற்றியும் அது கட்டப்பட்ட அவசியத்தைப் பற்றியும் மாணவ மாணவிகளுக்கும் விளக்கிக் கொண்டே வந்தாள். தன் கைக்கடிகாரத்தைப் பார்த்த தியாகராசா "இப்பொழுதே மணி பதினொன்றாகி விட்டதே. இங்கெல்லாம் அதிக நேரம் நிற்கமுடியாது" என்று சற்றுக் கடுகடுத்தார். அவர்தான் அந்த உல்லாசப் பிரயாணத்திற்குப் பொறுப்பான ஆசிரியர். "இங்கேதான் சங்கமித்தை கொண்டுவந்து நாட்டிய அரசமரமும், ஆயிரங்கால் மண்டபமும் இருக்கிறது. அவற்றையும் பார்த்துவிட்டுக் கிளம்பலாம் என்றாள் சந்திரா. அவள் எப்பொழுதுமே சற்று துடுக்குக்காரப்பெண். மற்றைய மாணவ மாணவி[illegible]ளுடன் சேர்ந்து கேலிக் கூச்சல்

எழுப்பினார்கள். தியாகராசா மாஸ்டர் அசடுவழிய எல்லோரையும் பார்த்தார். வழியில் ஒரு ஆலமர நிழலில் சாப்பாட்டுக் கட்டை விரித்தனர். வம்புப் பேச்சிலும், சிரிப்பிலும் பொழுது ஓடி மறைந்தது. பஸ் வேகமாக ஓடிக்கொண்டிருந்தது. தூரத்தில் கரும்பூதம் போல் காட்சியளித்த மலையை எல்லோருக்கும் சுட்டிக் காட்டி ''அதோ சிகிரியா நெருங்கிவிட்டது. நாம் முக்கியமாகப் பார்க்க வேண்டிய இடம்...'' என்றார் தியாகராசா. சிகிரியா மலையில் எழிலோவியங்களைப் பார்த்துவிட்டு அந்தவர்களின் வாய் ஓயவில்லை. காசியப்ப மன்னன் ஓவியக் கலையிலே கொண்டிருந்த பெருமதிப்பைப் பாராட்டிப் புகழ்ந்து கொண்டே கீழிறங்கி வந்தனர். பஸ் மீண்டும் புறப்பட்டு ஓடியது. சுசிலா ஒரு ஆங்கில நாவலை எடுத்து அதில் தன் கவனத்தைப் பதித்தாள். ''றைவர் கண்டிக்கு இன்னும் எத்தனை மைல்கள் இருக்கின்றன? எப்பொழுது நாம் போய்ச் சேரலாம்?'' குமாரின் கட்டைக்குரல் அங்கே நிலவிய அத்தனை இரைச்சலுக்கும் மேலாக எழுந்து நாவலில் மூழ்கியிருந்த சுசிலாவின் கவனத்தையும் கவர்ந்தது. கண்டி என்ற பெயரைக் கேட்டதுமே சுசிலாவின் முகம் மலர்ந்தது. குமிழ்ச்சிரிப்பு உதடுகளில் கொஞ்சியது. சிந்தனைக் குருவி சிறகடித்துக் கொண்டு பறந்தது. ஆசை அத்தான் மணிசேகரன் கண்டிச் சர்வகலாசாலையில் ''லெக்ஷரராக'' இருக்கிறான் என்ற இனிய நினைவில் தன்னையே மறந்தாள் சுசிலா.

சுந்தரேசரின் அருமைத் தங்கை செல்வராணி. அவள் பத்மநாதனைக் கைப்பிடித்து மூன்று வருடங்களின் பின் அவள் வயிற்றில் உருவானான் மணிசேகரன். தானும் மற்றவர்களைப் போல் தாயாகப் போகிறோம் என்ற மகிழ்ச்சியில் செல்வராணி சிறிது கர்வமே அடைந்தாள். ஆனால் அவளுடைய மகிழ்ச்சி அதிக நாட்கள் நீடிக்கவில்லை. தன் கணவன் வேறொரு பெண் வீட்டில் கள்ள வாழ்க்கை நடத்துவதை அறிந்து துடித்தாள். துளிர்ந்த மகிழ்ச்சி முளையிலேயே கருகிவிட்டது. மனவேதனையில் மருகினாள். தன் அண்ணாவிடம் தன் நிலையைக் கூறினால் கணவன் பெயருக்கு வீணாக இழுக்கு நேரிடுமே என்று அஞ்சியவள் நடைப்பிணமாக உலவினாள்.

நாட்கள் ஆமை வேகத்தில் நகர்ந்தன. செல்வராணி மணிசேகரனைப் பெற்றெடுத்தாள். மகனைக் கண்டு களிக்க மணாளன் வரவில்லை. உள்ளத்து வேதனையுடன் உடல் வேதனையும் அவளைப் பிடித்துக் கொண்டது. காலனுடன் போராடிக் கொண்டிருந்த செல்வராணி சுந்தரேசரை அருகில் அழைத்து அவர் கையில் மணிசேகரனை ஒப்படைத்து விட்டு உயிர் நீத்தாள். மனைவி இறந்த செய்தியறிந்த பத்மநாதன் வீட்டுக்கு வந்தார். மரணச் சடங்கில் யாரோ நாலாம் மனிதரைப் போலவே பொறுப்பற்றவராக நடந்துகொண்டார். பின் எவ்விதப் பிரச்சனைக்கும் இடம் வைக்காது போய் விட்டார். சில மாதங்களின் பின் அவர் தான் விரும்பிய பெண்ணை இரண்டாந்தாரமாக மணந்து கொண்

டார். மணிசேகரனைச் சுந்தரேசரும் அவர் மனைவி சிவகாமியும் அன்பாக வளர்த்து வந்தனர். அவர்கள் அரவணைப்பில் துன்பம் என்பது என்ன என்றறியாமல் வளர்ந்தான் மணி. இதற்கிடையில் சுந்தரேசரின் குடும்பத்தில் சுசிலா பிறந்தாள். அடிக்கடி தமது மகள் சுசிலாவையும் மணியையும் இணைத்துப் பேசி மகிழ்ந்தனர் தம்பதிகள். அதற்கேற்ப மணியும் சுசியும் அன்பென்னும் கயிற்றினால் பிணைக்கப்பட்டு ஒருவர் மேல் ஒருவர் உயிராக வளர்ந்தனர். காலம் உருண்டோடியது. சுசிலா பருவ மடந்தையானாள். மணிமேல் கொண்ட கள்ளங் கபடமற்ற அன்பு கள்ளத்தனம் மிக்க காதலாக மலர்ந்தது. கனவிலும் நினைவிலும் அவளுடன் கூடிக்குலவி அவள் சிந்தையெல்லாம் நிறைந்தான் மணிசேகரன். காலம் சிரித்தது. விரிந்து ஓடியது. மணிசேகரன் கண்டிச் சர்வகலாசாலையில் பி. ஏ. பட்டதாரியானான். பின் அங்கேயே வேலைக்கமர்ந்துவிட்டான். சுசிலா இன்ரமீடியட் பரீட்சையில் தேறியபின் தான் படித்த கல்லூரியிலேயே ஆசிரியையாகப் பணியாற்றவாரம்பித்தாள்.

''மிஸ் சுசிலா! புத்தகத்தைப் பிரித்தபடியே எங்கே யோசனையிலாழ்ந்துவிட்டீர்கள்? கண்டியிலுள்ள உங்கள் அத்தான் எமக்கு உதவியாக எல்லா இடங்களையும் சுற்றிக்காட்டுவார் அல்லவா?'' என்ற கேள்வியால் சுசிலாவின் சிந்தனையோட்டம் தடைப்பட்டது. திடுக்கிட்டு உணர்வு பெற்றாள்.

"ஆமாம் மிஸ்டர் செல்லத்துரை! நான் அவருக்கு நாம் வருவதைப்பற்றி ஏற்கனவே அறிவித்திருக்கிறேன். அவர் எல்லா ஏற்பாடுகளும் செய்திருப்பார்... என்று அவசரம் இழையோடக் கூறினாள் சுசிலா.

கண்டியை நெருங்க நெருங்க மாணவ மாணவிகளின் உற்சாகம் கட்டுமீறிப் பாய்ந்தது. யாழ்ப்பாணத்துக் கொடிய வெப்பத்தில் வெந்து கொண்டிருந்த அவர்களுக்குக் கண்டிநகரின் குளிர்மை உடலுக்கும் உள்ளத்திற்கும் வெகுவாக அமைதியையும் ஆனந்தத்தையும் கொடுத்தது. தங்கள் வரவை எதிர்நோக்கிக் காத்திருந்த மணிசேகரனைக் கண்டதும் சுசிலாவின் முகம் ஆதவனைக் கண்ட தாமரை மலரைப் போல் மலர்ந்தது.

"அத்தான்! நாளை முழுவதும் எங்களுடனிருந்து கண்டியைச் சுற்றிக் காட்டவேண்டும்..." என்றாள் சுசிலா எழிற் புன்னகையுடன்.

"ஆகா! அடியேன் காத்திருக்கிறேன்" என்றான் வேடிக்கையுடன் மணி.

எங்கும் சிரிப்பொலி. சுசிலா நாணித் தலை குனிந்தாள். மியூசியத்தைச் சுற்றிப் பார்த்தவர்கள் அடுத்து பௌத்தர்கள் போற்றும் தலதா மாளிகையின் எழிலைக் காணச் சென்றனர். கை கொள்ளாது மணி வாங்கிக் கொடுத்த தாமரை மலர்களைப் புத்தரின் திருவடிகளில் வைத்து வணங்கி எழுந்தபோது சுசிலாவின் உடல் பக்திப் பரவசத்தால் சிலிர்த்தது. கண்கள் இலேசாகக்

கலங்கி ஆனந்தக் கண்ணீரைப் பெருக்கின. இலங்கையில் மிகவும் பிரசித்தி பெற்ற பேராதனைத் தோட்டத்தைப் பார்த்தபோது எல்லோருக்கும் வியப்பினால் வாயடைத்துவிட்டது. "அப்பப்பா! எத்தனை வகை மலர்கள்" என்று தன்னை மறந்து கூவினாள் சந்திரா. தன் அத்தானுடன் ஆடுபாலத்தில் ஆனந்தமாகப் பேசியபடியே நடந்தாள் சுசிலா. அவள் உள்ளம் அப்பாலத்தைப் போலவே ஆனந்தநடமிட்டது. எப்படியோ ஒருவிதமாக எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டு அந்த உல்லாசப் பயணக் கோஷ்டி ஊர் திரும்பிற்று. சுசிலா தன் அத்தானைப் பிரிய மனமின்றிப் பிரிந்துவந்தாள்.

மாதங்களிரண்டு உதிர்ந்து மறைந்தன. மணிசேகரன் விடுமுறைக்காக வீட்டுக்கு வந்திருந்தான். மணியின் வரவால் சுசிலாவின் உள்ளம் மகிழ்வு மிகக் கொண்டது. மணி வீட்டுக்கு வந்து ஒரு வாரமாகிவிட்டது. அந்த ஒரு வாரமும் ஒரு வினாடியைப்போல் ஓடிமறைந்துவிட்டதை எண்ணியபோது பெருவியப்பாக இருந்தது சுசிலாவுக்கு.

அன்று...!

காலை ஆகாரத்தை முடித்துக்கொண்டு முன் கூடத்திலமர்ந்து கொண்டிருந்த மணியைப் பார்த்து "இன்னும் ஒரு வாரத்தில் உன் லீவு முடிந்துவிடுமல்லவா? உனக்கும் வயதாகிவிட்டது. வருகிற ஆனி மாதத்தில் உன் கலியாணத்தை முடித்துவிடலாமென்றிருக்கிறேன். நீ

என்ன சொல்லுருய்? என்று கேட்டார் சுந்தரே சன். மணி நிமிர்ந்து உட்கார்ந்தான். "என்ன மாமா! என் கலியாணத்திற்கு இப்பொழுது என்ன அவசரம்? முதலில் சுசியின் கலியாணம் முடியட்டுமே... என்ருன் மணி. சிறிது வெட்கத் துடன் வியப்புடன் மணியை உற்று நோக்கிய சுந்தரேசன் "உன்னுடன் மணமேடையில் மணப் பெண்ணுக அமரப்போவது சுசிலாதானே?" என் ருர்.

மணி திடுக்கிட்டு நிமிர்ந்து உட்கார்ந்தான். அவன் முகம் பேயறைந்தாற்போல் காட்சியளித் தது. "இது என்ன மாமா! ஒன்ருக உண்டு, உடுத்து ஓடியாடி விளையாடியவர்கள் நாங்கள். சுசிமேல் எனக்கிருக்கும் பாசம் சகோதரபாசமே யன்றிக் காதலல்ல மாமா...... சுசி என் உயிருக் குயிரான தங்கை...... நான் ஏற்கனவே என் இத யத்தில் வேருெருத்திக்கு இடம் கொடுத்துவிட் டேன். நான் அவளை அடைவதற்கு உங்கள் அன் பையும் ஆசியையும் அளியுங்கள் மாமா......"

"யாரவள்......?" சுந்தரேசரின் உள்ளம் ஏமாற்றத்திஞல் கொதித்தது. தன்னறைக்குச் சென்று மிகவிரைவில் திரும்பிவந்தான் மணி. கையோடு கொண்டுவந்திருந்த புகைப்படத்தை சுந்தரேசருக்கு முன்னே நீட்டிஞன். புகைப்படத் தில் சிங்களச் சிங்காரி ஒருத்தி இளஞ்சிரிப்புடன் நின்றுகொண்டிருந்தாள். வெறுப்புடன் புகைப் படத்தைத் திருப்பிஞர். என் உயிர் மணிசேகர ஹுக்கு சுராங்கனியின் அன்புப்பரிசு என ஆங்கி லத்தில் எழுதப்பட்டிருந்தது. புகைப்படத்தை மணியின் முகத்தில் வீசியெறிந்தார் சுந்தரேசர்.

''காதலாம் காதல். உன்னை வளர்த்து ஆளாக்கியமைக்கு நல்ல கைம்மாறு செய்துவிட்டாய். இந்தச் சிங்களக்குடியிலும் பார்க்க என் சுசி எதில் குறைந்துவிட்டாள்... ஏமாற்றத்தின் சீற்றத்தோடு சீறினார் சுந்தரேசர். ''நான் அப்படிச் சொல்லவில்லையே மாமா! தங்கை சுசிக்கு ஏற்ற கணவனைத் தேர்ந்தெடுப்பது என் கடமை. அவளுடைய திருமணத்திற்காக நான் பத்தாயிரம் ரூபா பாங்கில் போட்டிருக்கிறேன். அனாதையான என்னை நீங்களும் அத்தையும் வளர்த்து ஆளாக்கினீர்கள். அதற்காக நான் என்றென்றும் தங்கள் குடும்பத்திற்குக் கடமைப்பட்டவன். அந்த நன்றியை என்றென்றும் மறவேன். என்னை மன்னியுங்கள் மாமா... மணியின் குரல் தளதளத்தது. கூடத்தில் நடந்தவைகளெல்லாவற்றையும் பார்த்துக்கொண்டிருந்த சுசிலாவின் இதயம் சுக்கல் சுக்கலாக வெடித்துச் சிதறியது. அவள் கட்டியிருந்த ஆசைக்கோட்டைகள்......? கண்களில் கண்ணீர் கரைபுரண்டது. கண்கள் கோபத்தினுல் சிவக்க ''இருபத்தெட்டு வருடங்களாக இறுகிய பந்தம் இன்றோடு இருந்த இடம் தெரியாமல் தொலைந்தது. கயவன் ஒருவனின் இரத்தம்தானே உன் உடலில் ஓடுகிறது. அந்தப் பெண்ணுடன் நீ எப்படி இன்பமாக வாழப் போகிறுய் என்று நான் பார்க்கிறேன். உன் வாழ்வு பரிநாசமாகப் போகட்டும்...'' வாய்க்கு வந்த விதமாகக் கத்தினுர் சுந்தரேசர். தயக்கத்துடன் சுசிலாவின் அறைக்குள் நுழைந்தான் மணி.

''சுசி! என்னை மன்னித்துவிடு. நான் போய் வருகிறேன்...'' மணியின் குரலில் வேதனை தோய்ந்திருந்தது.

''அத்தான்! உங்கள் நல்வாழ்விற்கு என் வாழ்த்து. மகிழ்ச்சியோடு போய்வாருங்கள்... சுசிலா விரக்தியோடு புன்னகை புரிந்தாள்.

''சுசி! உன் மென்மையான இதயத்தின் உணர்ச்சிகளைப் புரிந்துகொள்ளாது உன்னை நான் வஞ்சித்துவிட்டேன். ஆனாலும் உன்னைக் கெஞ்சிக் கேட்கிறேன் சுசி! உன் மனதைத் தேற்றிக் கொண்டு புதுவாழ்வில் நீ ஈடுபட வேண்டும்...'' விரக்தியுடன் சிரித்தாள் சுசிலா.

''அத்தான்! இதயம் என்பது ஒரு கோயில் அக்கோயிலில் ஒரே ஒரு தெய்வத்திற்குத்தான் இடமுண்டு. அந்தப் பாக்கியம் எனக்குக் கிடைக்கவில்லை. ஆயினும் பெண்களின் பெருமை, இல்லறத்தில் மட்டுமல்ல. வேறு வழிகளினாலும் எத்தனையோ பெண்கள் சமூகத்திற்காகவே வாழ்ந்து பெருமையடையவில்லையா...? அத்தான்! உங்கள்மேல் எனக்கு எந்த வகையிலும் கோபமில்லை. யேசுநாதர் என்னைத் தம் திருப்பணிக்கு அழைக்கிறார். அவரின் அருள் எனக்குக் கிட்டிவிட்டது. இனிமேல் சுசிலா உங்களுக்கு மட்டுமல்ல... உலகத்திலுள்ள ஒவ்வோர் உயிருக்கும் சகோதரி...'' சுசிலாவின் கருவிழிகளில் அலாதியானதொரு புதிய ஒளி பிரகாசித்தது. அவ்வொளிக்கு முன்னே நிற்கக்கூசியவனாகத் தலையைக் குனிந்துகொண்டு விடுவிடுவென நடந்தான் மணி.

# கொசு விடு தூது

— ஈழத்துநாதன் —

இங்கிணு கிணுகிணு கொசுவே யுந்தன்
சங்கொலி யெந்தன் கட்செவி தன்னில்
இங்கித மாக ஒலித்திட வந்தாய்!
மங்கை நல்லாள் மனையது சென்று
குங்குமப் பொட்டுக் கூந்தலில் மொட்டு
தங்கத் தட்டு தேகத்தில் பட்டு
சங்குக் கழுத்தாள் நெஞ்சில் எழுத்தாய்
பொங்கிடு மெந்தன் குமுறல் கூறாய்!

உள்ளம் கிள்ள உணர்ச்சி வெள்ளம்
ஊற்றாய்ப் பெருக ஒன்றாய்ப் பழகி(ய)
பள்ளி வாழ்க்கை பழமை கொள்ள
பறந்தாள் பேதை மறந்தாள் என்னை
அள்ளிப் பருகி அன்னத் தேனை
அணைத்து யின்பம் அடைந்த மானைச்
செல்லும் வழியில் கண்டா யானால்
சொல்லு யெந்தன் உள்ளக் குமுறல்.

பாலைப் பார்த்தால் வாலைக் குமரி
பார்வை யங்கே பதியும் நெஞ்சில்
மாலைத் தென்றல் மாய்க்குந் தீயாய்
மோதி யெந்தன் மெய்யில் வாது
சாலச் செய்யும் தூக்க மின்றித்
துவளும் நிலையில் சாகும் முன்னர்
நாலைக் கட்டிப் பருவத் தோடு
நூறு வருடம் வாழச் சொல்லு.

எந்தன் குருதி தன்னை யுறிஞ்சி
எந்திழை யாளின் உடலிற் பாய்ச்சி
சொந்தம் இறுக பந்தம் பிணைய
செய்வாய் கொசுவே! சிலையா லின்றி

வெந்தே மடியும் துன்ப நிலையால்
வெறுத்தே னுலகை யதற்கு முன்பு
வந்தா லின்ப வாழ்வு காண
வகுப்பேன் பாதை யென்று சொல்லு

இன்னும் ஒன்று சொல்ல வேண்டும்.
இன்ப வாழ்வு காண வேண்டும்
என்ற எண்ணம் உண்டே யானால்
இன்றே வருகை தந்தா லிங்கு
கண்ணா லின்பம் கதையா லின்பம்
காரிகை யாளின் மார்பிடை யின்பம்
கண்டாற் குழவி குதலை யின்பம்
காண்போ மென்று சொல்லு! சொல்லு!

★

# தமிழ் மகள் குரல்

[செல்வி. செல்வமணி வடிவேல், பி.எஸ்ஸி.]

இந்து மகா சமுத்திரத்தின் இதயந்தன்னில்
ஈழத் திருநாடு இசையோடு வீற்றிருக்க
இனிய மொழிபேசும் ஈழத்தமிழன் நாம்
ஈருட லோருயிராய் இருந்தோம் சிங்களவரோடு

ஈழத்தின் சுதந்திரத்தில் ஈடில்லாப் பங்குகொண்டோம்
இறுதியில் கிடைத்த பலன் இனவேற்றுமையே தான்
ஈவிரக்க மில்லாமல் இடியொன்றைப் போட்டுவிட்டார்
இருபத்தைந்து லட்சம் தமிழர்நாம் எங்குசெல்வோம்:

அகிம்சையின் அடிப்படையில் அணைத்திடுவோம்
[உரிமைகளை
ஆருயிரைக் கொடுத்தேனும் அரியதமிழ் காத்திடுவோம்
அகிலமெலாம் புகழ்ந்திடும் நல் அருந்தமிழை
[வளர்த்ததனை
[illegible] யாக்கிடவே அயராது உழைத்திடுவோம்.

வடகிழக்குப் பகுதிகளில் வாழ்ந்துவரும் தமிழர்தாம்
மலைநாட்டு மறத்தமிழர் கூட்டத்தோடு கலந்து
வண்டமிழை வாழவைக்க வழிவகுத்து ஈழத்து
மண்டலத்தை இனியதமிழ் நாடாக்கி வாழ்விப்போம்.

★

# ஒன்றுபடமாட்டீரோ!

"சு. பிதா"

சொல்லுதற்கு நாக்கூசும் மனமும் நாணும் சோகச்
    சித்திரத்தை வளர்த்து வரும் தமிழினமே
வெல்லுதற்கு ஆளின்றி வாழ்ந்த உன்
    வாழ்வெங்கே வீரத்தோளெங்கே வரலாறெங்கே
பள்ளத்தில் கிடந்தலைந்த மக்களெல்லாம்
    படைநடத்தி மகிழ்கின்றார் இந்நாளில்
உள்ளபுகழ் அத்தனையும் இழந்து நீயோ
    உயிரோடு இருக்கின்றாய் விந்தை தாயே!

ஒன்றுபட மாட்டீரோ தமிழ் மக்காள்
    ஓராயிரம் கொள்கை உட்பகைகள்
கொண்டலையும் தாயினமே நமகத்தை
    சுட்டுப் பொசுக்கிவிடச் சம்மதமா?
பண்டைப்புகழ் பேசும் புலவர்களே
    பாராளப் போராடும் உறுப்பினரே
ஒன்றுபட மாட்டீரோ, ஒன்றுபட்டால்
    முடியாதோ வெற்றிகொள்ள வாகைசூட.

நாயுந்தான் வயிர்வளர்க்கும் சோற்றைநம்பி
    நாயல்ல நாமெல்லாம் மனிதமக்கள்
போயொருநாள் சுடுகாட்டுப் புதைகுழியில்
    மாளுமுன்னே நாம்பிறந்த நாட்டுக்கு
தொண்டுசெய வேண்டாமா எண்ணிப்பாரீர்!
    துடித் தெழுவீர் எழுச்சிகொள்வீர்
பண்டைப் புகழ் மீட்போம் வாழ்ந்த
    புகழ்வளர்ப்போம் வளர்ப்போம் வாரீர்.

—"சாந்தி என்ற உன் பெயரைச் சொன்னாலே என் கவலையெல்லாம் பறந்து மனம் சாந்தியடைகிறது. மணந்தால் சாந்தியையே ...... இல்லையேல் ...... பிரமச்சாரியாகவே......!"—

# சாந்தி

—செல்வா.

சாந்தியின் வீட்டு மணிக்கூடு ஏழு முறை அடித்தோயவும், முரளி அவளிடம் விடை பெற்றுச் செல்லவும் சரியாகவிருந்தது. அவன் சென்றதும் சாந்தி மீண்டும் அந்தப் புத்தகத்தை விரித்தாள். அதன் பெயரை வாசித்தாள். 'இல்லறமும் பிரமச்சரியமும்', அதையே தொடர்ந்து பல தடவைகள் வாசித்து நீண்ட பெருமூச்சு விட்டபடி அடுத்த பக்கத்தைப் புரட்டினாள். அப்பக்கத்தில் முரளியின் முழு உருவமே தெரிந்தது. கண்ணிமைப் பொழுதில் அது மறைந்து அவள் கண்களுக்கு எழுத்துக்கள் அனைத்தும் மங்கலாய் — ஒளியிழந்து தெரிந்தன. சாந்தியின் உதடுகள் அசைந்ததே தவிர அவள் [illegible] தான் முரளியிடம் கூறிய தன்

வாழ்வையும், அவன் அதற்கு மொழிந்த ஆறுதல் வார்த்தைகளுமே அவள்முன் சுழன்று வட்டமிட்டன.

ரவி, சாந்தியை சில வருடங்களுக்குமுன் அவளின் பாடசாலையில் நடந்த நாடகத்தின் மூலம் சந்திக்க நேர்ந்தது. அன்றிலிருந்து அவள் பாடசாலைக்குப் போகும்போதும் வரும்போதும் அவன் அவளைச் சந்திக்கத் தவறுவதில்லை. இந்தச் சந்திப்பு நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாய் வளர்ந்து கொண்டே வந்தது. ஒரு ஆணும் பெண்ணும் நாளாந்தம் சந்திக்க நேர்ந்தால் அந்தச் சந்திப்பு அத்துடன் முடியுமா...? அது தொடர்ந்து எங்கெல்லாமோ செல்லும். அது இயற்கை. அந்த சந்திப்பின் போது ரவி கூறும் அன்பு வார்த்தைகள் ஒவ்வொன்றும் அவள் மனதில் அழியாத சிலைபோல் நிலைபெற்று விட்டது, இத்தனையையும் சுக்குநூறாக்க இருவருக்கும் இடையில் எங்கிருந்தோ ஒரு புயல் வீசியது.

அழியாத சிலையான ரவியின் வார்த்தைகள் அவள் கண்முன் சுழன்றன. அந்த வார்த்தைகளில்தான் எத்தனை கனிவு — எத்தனை இனிமை. அப்பப்பா நினைக்கவே முடியாது. சில வேளைகளில் அவனின் வார்த்தைகளைக் கேட்டு மெய் மறந்து விடுவாள் அந்தப் பாவை. அவ்வார்த்தைகளில் சிலவற்றை அவள் வாய் முணுமுணுத்தது. ''சாந்தி! ஆகா, என்ன அழகான பெயர். சாந்தமே உருவான உன் பால்வடியும் முகத்திற்கு ஏற்ற பெயர்தான். அந்தப் பெயருக்கேற்ற

கவர்ச்சியும், அந்தக் கவர்ச்சியை மேலும் மேலும் அழகுபடுத்த உனக்கிருக்கும் அழகிய கருங்கூந்தலும் இவை அனைத்தும் உடைய எழில் வதனம் நான் எங்கிருந்தாலும் தோன்றாமல் விடுவதில்லை. உன்னிடமிருந்து என்னை யாராலும் பிரிக்க முடியாது. நீதான் எனக்கு ஒருவேளை துரோகமிழைத்தாலும் நான் ஒரு போதும் துரோகமிழைக்க மாட்டேன். அதை மனதாற் கூட நினைக்கமாட்டேன். சாந்தி என்ற உன் பெயரைச் சொன்னாலே என் கவலையெல்லாம் பறந்து மனம் சாந்தியடைகிறது. மணந்தால் சாந்தியையே... இல்லையேல் பிரம்மச்சாரியாகவே......'' இவை என் ரவி கூறிய வார்த்தைகள் தானா, அவளால் தன் காதுகளையே நம்ப முடியவில்லை. இத்தனையையும் கூறிய ரவியையா இன்று என்னிடமிருந்து...... அவளுக்கு நாத் தடுமாறியது. பெண் அல்லவா, மனம் பேதலித்தது. மனப்புயலை அடக்க முடியாமல் — தடுக்க முடியாமல் திண்டாடினாள்.

ரவியின் உறவு முறையான திரேஸ், சாந்தியுடன் மிகமிக அன்பாய்ப் பழகி வந்தாள். பாடசாலை விடயங்களில் இருவரும் ஒற்றுமையாகவே பங்கெடுத்தனர். ஆனால், காலம் என்றும் ஒரே மாதிரியாக இருப்பதில்லை. அதேபோல் அவர்களிடையே பாடசாலை விடயமாகப் போட்டி ஏற்பட்டது. போட்டி பகையாக உருமாறி பின் பொறாமையாக உருப்பெற்றது. சாந்தியின் மேல் திரேசுக்குள்ள பகையும், பொறாமையும் [illegible] நாள் வளர்ந்து அவளின் வாழ்க்கை

யிலும் தலையிட ஆரம்பித்துவிட்டது. சாந்தியைக் கண்டதும் அவளைப் பற்றிக் கேலியாக மற்ற மாணவிகளிடம் கூறிச் சிரிப்பாள். அதில் அவளுக்கு ஒருவித மகிழ்ச்சியேயிருந்தது. பெண்களுடன் கூடப் பிறந்ததுதானே பொறுமை. சாந்தியைப்பற்றி வித்தியாசமாய் ரவியிடமும் ஆரம்பித்துவிட்டாள் அவனோ அதை ஒன்றும் பொருட்படுத்த மாட்டான். ஒருகாதாற் கேட்டு மறுகாதால் விட்டுவிடுவான். அவனுக்கு அத்தனை நம்பிக்கை சாந்தியிடம்.

சாந்தி எச். எஸ். ஸி. இரண்டாவது ஆண்டு படிப்பவள். திரேஸ் எச். எஸ். ஸி. முதலாவதாண்டு படிப்பவள். இருவரின் வகுப்புகளும் எதிர் எதிரே இருப்பன. சாந்தியைக் கண்டதும் ஏதாவதொன்று கூறாத நாளே கிடையாது. இப்படி ஏதாவது சொல்லாவிட்டால் அவளுக்கு நிம்மதி ஏது? ஒரே வகுப்புப் படிப்பவர்களானால் பக்கத்தில் இருந்து ஒரே குத்துக்கதைகள் சொல்லிச் சொல்லி அவளின் படிப்புக்கே முற்றுப்புள்ளியிட்டு மகிழ்ந்திருப்பாள் திரேஸ். இந்த இடத்தில்தான் சாந்தியின் பக்கம் திரேஸ் சார்ந்திருந்தாள். சாந்தியைப்பற்றிய தவறான எண்ணத்தை சகமாணவிகளிடம் புகுத்த முற்பட்டாள். இல்லை ... இல்லை... புகுத்தியே விட்டாள் எனலாம். சில தருணங்களில் சாந்தி செய்வதறியாது திகைப்பாள் — தவிப்பாள், வீட்டில் வந்ததும் படுக்கையில் கிடந்து குமுறிக் குமுறி அழுவாள். அவளுக்கு இதைத் தவிர வேறெதைச் செய்ய முடியும். ரவி தன்மேல் நம்பிக்கை வைத்திருப்பதால்தான்

திரேசின் வார்த்தைகளுக்குச் செவிசாய்க்காமல் இருக்கிறார் எனத் தன்னைத் தானே தேற்றிக் கொள்வாள். எந்நேரமும் ரவியைச் சாந்தியிடமிருந்து பிரிக்கக் கங்கணம் கட்டிக்கொண்டிருந்தாள் திரேஸ். இதற்கு ஒரு நல்ல சந்தர்ப்பத்தையே எதிர்நோக்கியிருந்தாள். கடைசியில் முரளியையும், சாந்தியையும் பிணைத்துக் கதை கட்டிவிட்டாள். இதை எவ்வளவுக்கெவ்வளவு அவளால் மற்றவர்களுக்குப் பரப்ப முடியுமோ அவ்வளவுக்கவ்வளவு பரப்பினாள்.

அன்று பாடசாலைக்கு வந்ததும் வராததுமாக மாணவிகள் குழாம் அவளைச் சூழ்ந்துகொண்டது. அவளுக்கு ஒரே வியப்பாகவிருந்தது. "எப்படியம்மா இரண்டு தோணிகளில் காலை வைத்துக்கொண்டு செல்லப்போகிறாய்" என்றாள் அவர்களில் ஒருத்தி. அவளோ எதுவும் புரியாமல் விழித்தாள். இந்தப் பெருமைக்காரியின் திருவிளையாடல் இத்தனை தூரம் வருமென அவள் எப்படிப் புரிவாள். எல்லோர் முகங்களையும் பார்த்தாள். பின் "நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்?" மாணவிகள் குழாம் கூடிவிட்டால் கேட்கவும் வேண்டுமா. "சாந்தி! நாங்கள் சொல்லவில்லையடி இந்தப் பாடசாலை சொல்லுகிறது. ரவியுடன் பழகிற மாதிரி இப்பொழுது முரளியுடனும் நீ..." என இழுத்தாள் இன்னொருத்தி. இதைக் கூறியதும் மாணவிகள் அனைவரும் கிளுகிளு எனச் சிரித்தனர். அவளுக்கு உலகமே இருண்டது. குறிப்பாக அவள் வாழ்வே இருண்டதெனலாம். இத்தனைக்கும் அங்கில்லை திரேஸ்.

இருந்திருந்தால் இன்னும் விபரீதமாய் முடிந் திருக்குமென எண்ணும்போதே அந்தப் பேர ழகி தன் பின்னலிரண்டையும் மார்பிலே தவழ விட்டு — புத்தகமும் கையுமாக — மயில்நடை போட்டு — ஒரு சினிமாப்பாட்டை வாயிலே முணு முணுத்தவாறு அங்கு வந்து சேர்ந்தாள்.

வந்தவள் ஒரு பார்வை பார்த்தாள். கண் ணகி பரம்பரையாகவிருந்தால் அந்தப் பார்வை யில் அவள் சாம்பல்தான். பார்த்தவள் ஆரம்பித் தாள் "சாந்தி! குறை எண்ண வேண்டாம் நீ ரவியுடன் பழகுவது எனக்கும் எங்கள் இனத்த வர்களுக்கும் பிடிக்கவில்லை. உன்னை நல்லவள் என்றுதான் எண்ணியிருந்தேன். வரவர உன் போக்கே சரியாகப்படவில்லை எனக்கு. உன்னைப் போல் வித்தியாசமான வாழ்வு வாழ்ந்து எங்க ளுக்குப் பழக்கமில்லை. அம்மா உன்னைவிட அழகும் பணமுமுடைய பெண்கள் அண்ணன் ரவிக்காகத் தவம் கிடக்கிறார்கள். அறிவிருக்கலாம் உனக்கு அதைக்கொண்டு இன்றைய உலகில் வாழ முடி யாது. அறிவிருந்தும் பண்பு கெட்டவள் என்று நினைக்கும்போது வெட்கமாய் இருக்கிறது. உன் னைத் தோழியென்று மதித்து வந்தேனே..." பொரிந்து தள்ளினாள். கேட்டுக் கொண்டிருந்த சாந்திக்கு கண்ணில் நீர் மல்கியது — தலையே ஒருகால் சுற்றியது— அவள் நிலை தடுமாறினாள். ஒருவாறு தன்னைத் திடப்படுத்திக் கொண்டு. திரேஸ் நான் ஏழைதான் ஒப்புக்கொள்கிறேன் ஆனால் பேதை இல்லை" ஒவ்வொரு சொல்லையும்

அளந்து சொல்லிய சாத்தி வகுப்பறைக்குச் செல்லாது விறுவிறுவென வீட்டையடைந்தாள்.

அவள் மனம் இருப்புக்கொள்ளவில்லை. புத்தகங்களை எல்லாம் மேசையின் மேல் விட்டெறிந்தாள். அவள் மனம் வேதனையால் வெதும்பியது. வேதனையின் விளிம்பிற்கே சென்று விட்டாள். நீண்ட பெருமூச்சொன்றை உதிர்த்தாள். அவளால் அதைத்தான் அப்போது செய்ய முடிந்தது. கடைசியில் ஒரு முடிவுக்கு வந்தாள்.

நான் வாழாவிட்டாலும் ரவியாவது வாழட்டும் என்ற முடிவுக்கு வந்தாள். கடந்த கால வாழ்க்கை அவள் கண்முன் சுக்குநூருக உடைந்து கொண்டே இருந்தது. காயாஞல் கசப்பதென்ன கனியாஞல் இனிப்பதென்ன? என்று தன்னையே கேட்டுக் கொண்டாள், அவளோ பல நல்லறிஞர்களின் அறிவுக் கருவூலங்களைப் படித்து ஆராய்ந்து அறிந்தவள், இருந்தும் இக்கேள்விக்கு அவளால் விடைகாண முடியவில்லை. அப்போதிருந்த நிலையில் எப்படி முடியும். எப்படித்தான் படித்துப்—பட்டம் பெற்று —அறிவு பெற்றிருந்தும், துன்பம் வரும் போது பெண்கள் தங்கள் சுயநினைவை — அறிவை இழந்து விடுகிருர்கள். இதைத்தான் பெண்புத்தி பின்புத்தியென்று பெரியவர்கள் சொல்லி வைத்தார்களோ என்னவோ. என்றும் தான் கன்னியாகவே இருப்பேன் என்ற முடிவுடன் "இல்லறமும் பிரம்மச்சாரியமும்" என்னும் நூலை எடுத்தாள்.

மணிக்கூடு ஒரு முறை அடித்து நாலரை எனக் காட்டவும், சாந்தி புத்தகத்தை எடுக்கவும், முரளி சாந்தியின் வீட்டினுள் புகவும் சரியாகவிருந்தது. புத்தகத்தைக் ''கண்டதும் பிரமச்சாரி'' விரதமா என்று முந்திக்கொண்டே கேட்டான் முரளி. தன் வாழ்க்கையைக் கூறி ஆறுதலடைய எவருமில்லையே என்று எண்ணிய சாந்தி தன் சோக வாழ்வை அப்படியே கூறினாள். என்னால் உங்களுக்கும் கெட்ட பெயரே என்று சொல்லி முடித்தாள். அவள் கண்களில் நீர் மல்கி கன்னங்களில் விழுந்தது. ஆள்காட்டி விரலால் கன்னத்தில் விழுந்த கண்ணீரைத்தட்டி விட்டாள். இருவரின் வாழ்க்கை வரலாற்றை அறிந்தவன் முரளி. இருந்தும் ஆறுதல் கூற முடியவில்லை. சில வினாடிகள் அமைதி நிலவியது.

முரளிதான் கலைத்தான். ''சாந்தி, நடந்தது நடந்ததாகவே இருக்கட்டும், இனி நடக்கப் போவதைப் பற்றிச் சிந்தியுங்கள்.'' அதற்கு சாந்தி ம்... என்று பெருமூச்சு விட்டபடி விரக்தியாச் சிரித்துக் கொண்டே இதைவிட இன்னும் நடக்க வேண்டியது என்ன இருக்கிறது.'' ''எண்ணித் துணிக கருமம் துணிந்தபின் எண்ணுவதென்பது இழுக்கு. நடந்ததைப் பற்றிக் கவலைப் படுவதில் பயன் இல்லை. ஊர்வாய் சும்மா இருக்காது அது பலதும் பத்தும் சொல்லும் இதற்குக் காது கொடுத்தால் இன்றைய உலகில் வாழ முடியாது. ஒன்றில் இருவரும் ஒன்று சேர்வ ...!'' பேசி முடிக்குமுன் சாந்தி குறுக்கிட்டாள் நெல்லை எடுத்து அரிசியையும் உமியையும் வெவ்வேறாகப் பிரித்தால் மீண்டும் அவைகளை ஒன்று

சேர்த்து நெல்லாக்க முடியுமா?'' ''உமது சகோதரனைப் போல் கூறுகிறேன் இன்ப துன்பம் ஓர் சுழல் சக்கரம் போன்றது அது எவர் வாழ்விலாவது இல்லாமல் இல்லை. அதற்கு ஏற்ப வாழ்க்கை நடத்திஞல்தான் வாழ முடியும். உங்கள் வாழ்க்கையைப் பாழ்படுத்தப் போகிறீர்களா? இறைவன்மேல் பழியைப் போடுங்கள் அவர் வழிகாட்டுவார். நீண்ட நேரம் ஆறுதல் மொழி கூறிய முரளி கடைசியாக மனதைச் சஞ்சலப் படுத்தாமல் இருங்கள் என விடைபெற்றுச் சென்ருன்.

அவன் கூறிய அன்பு கனிந்த ஆறுதல் மொழி ஓரளவுக்கு ஆறுதல் அளித்தது. அவன் சொன்ன ஒவ்வொரு சொல்லும் பசுமரத்தாணிபோல் மனதில் ஆழமாய்ப் பதிந்தது. ஒருவித தெம்பு தோன்றியது. தன்னைத்தான் திடப்படுத்திக் கொண்டு இறைவனிடம் பழியைப் போட்டாள். இந்த ஏழு மணி இருளுடன் தன் கடந்தகால இருண்ட வாழ்வு மறைந்து, புதிய வாழ்வு மலரப் போவதாக உணர்ந்தாள். கடந்தகால வாழ்க்கை ஏழு மணியுடன் முரளியின் வார்த்தையால் சாந்தியின் மனம் சாந்தியடைந்தது. அந்நேரம் அடுத்த வீட்டு வாஞெலியும் ''வருந்தாதே ஏழை மனமே வருங்காலம் நல்லகாலம்'' என்ற பாட்டை தவழ்ந்து வரும் தென்றலிடையே ஒலிபரப்பியது. சாந்தியின் காதிலும் ஒலிக்கத் தவறவில்லை.

# நிலையாகுவேன்

"அண்ணல்"

தண்புனல் நிறை வாவியில் வளர்
　　தாமரை எழில் வதனமோ?
கண்களாம் வெறி கொண்ட வண்டுகள்
　　கலவியின் முனை யிட்டதோ
பண்கலந் திசை பாய்ச்சுதல் மொழி
　　பால்பழம் பிழி சாறதோ?
என்னுளங் குடி கொண்டவள் எழில்
　　மின்னலாம் இடை பெற்றளோ?

வெட்டு வேலையில் கெட்டியாம் எனும்
　　வல்லவன் நிறை வெண்ணிலா
கொட்டு மாரியில் குளிர்மை யூட்டியக்
　　குடவான் மாலைது டிச்சலில்
இட்டெடுத்த பொற் பாறையிற் சிலை
　　வெட்டவே உயிர் பெற்றதோ?
கட்டிளம் உடல் கூட்டிடுஞ் சுவை
　　கருத்திினில் நிறை வுற்றது.

செய்ய மாதுளஞ் செங்கனி சித
　　றுண்டதோ நகைச் செவ்விதழ்
துய்ய தேனிலே தோய்த்ததோ விரு
　　கன்னம் தக்காளிச் சாதியோ
வெய்யவன் ஒளி தன்னிலே சுடர்
　　மேவிடும் நுனி மூக்கிலே
செய்யுமே வெறி சேயிழை உளம்
　　சேர்வனே மயல் சேர்ப்பளே.

நெருங்கினுல் குளிர் றுறுவுவாள் அயர்
　　நீங்கினுல் அனல் தொடங்குவாள்
மருங்கினு லென மயக்குவா ளிரு
　　மாதுளங் கனி மார்பினுல்
நெருங்கினுள் எழில் நடையினுல் மயில்
　　நெஞ்சிலே அரங் கேறினுள்
உறங்கிலேன் அவள் உறவிலே கலை
　　உலகிலே நிலை யாகுவேன்.

# உணர்ச்சி!

—ச. பத்திநிச்சாமி—

அறவுயிர் மீதுண்டாகும் அருளுணர்ச்சி
அன்புயிர் மீதுண்டாகும் அன்புணர்ச்சி
பிறவுயிர் மீதுண்டாகும் பேருணர்ச்சி
பிழைசெயல் மீதுண்டாகும் வெறுப்புணர்ச்சி
நிறைவுடையோர் மீதுண்டாகும் விருப்புணர்ச்சி
நித்தியத்தின் மீதுண்டாகும் ஞானஉணர்ச்சி
பொறையுடையோன் எனவாழ்ந்து பொறுப்புணர்ச்சி
பொருந்திமிக வல்லவனாய் வாழவேண்டின்

பகைசெயல்கள் மீதுனக்குப் பகையுணர்ச்சி
பணமில்லா ஏழைமேல் பரிவுணர்ச்சி
வகைவகையாய் பட்டுடுத்து மேனிகாட்டும்
வனிதையர் வலைவிழா வாழ்வுணர்ச்சி
தொகைகூறி தன்மானம் விற்றிடும்
தரங்கெட்ட போக்குகளில் விளிப்புணர்ச்சி
நகைகளென கொண்டுலகில் வாழ்ந்திரானால்
நல்வாழ்வு பெற்றுமன நிறைவு காண்பீர்.

கலைகளின் மீதுண்டாகும் கலையுணர்ச்சி
காரிகை மீதுண்டாகும் காமவுணர்ச்சி
குலையாத மனத்தினையும் குலைக்கச் செய்யும்
குத்திரங்கள் உண்டாக்கும் புகழுணர்ச்சி
நிலை கடந்து நின்றுவிடின் தினப்புணர்ச்சி
நீள் துயர முண்டாக்கும் விழிப்புணர்ச்சி
இலை போலும் முலைமாதர் வலை விழாமல்
இங்கித்து சிறப்புணர்ச்சி பெற்றுவாழ்வீர்!

# "செங்கனலாகச் சிரித்துவந்தாள்"

—வி. இராஜேந்திரம்—

பாட்டொன்று பாடவில்லை
பாவொன்று புனையவில்லை
நாட்டமுடன் நான்சொல்லும்
நடந்தவற்றைக் கேட்டிடுவீர்

மார்கழித் திங்களோர்நாள் — என்
மனமேட்டி லவள்வந்தாள்
கார்மூடிய நெஞ்சமதில்செங்
கனலாகச் சிரித்துவந்தாள்.

காலமெனும் காட்டாற்றில் — வளர்
காதலெனும் படகுவிட்டு
ஞாலமதில் நாம் வாழ
நாட்டமுற்று மகிழ்ந்திருந்தோம்.

மாங்கனி மரந்தன்னில் — காதல்
மங்கைதான மர்ந்திருந்தாள்
பொங்குகின்ற ஆழிதன்னில்
பொன்மீனு யுருவெடுத்தாள்.

காதலித்தோம் கட்டுண்டோம்—கற்பனையில்
காதவழி ஓடிவிட்டோம்
காதனையா? இல்லையில்லை. சாதிப்பிரிவு
சமயத்திலெமைப் பிரித்ததம்மா!

காற்றிலே கலந்துவிட்டாலும் — என்
காதலியை மறவேனே
தூற்றுவோர் தூற்றிடினும் அத்
தூயவளையென்றும் மறவேனே.

—உண்மையிலேயே போராட்டத்தில்
கலந்து கொண்டு உயிர்த்தியாகம்
செய்தவன் தொழிலாளி ராம
சாமி. ஆனால்...! உண்மையைப்
பொய்யாக மாற்றும் மந்தி
ரம் கற்ற முதலாளி சாம்ப
சிவம் எப்படியோ
மாண்டுபோனார். விந்
தைச் சமூகம் விழா
வெடுத்தது......!
யாருக்காக ?—

# "யாருக்காக?"

—நி. அரியநாயகம்

வீதியின் இருமருங்கிலும் மாவிலைத் தோரணங்கள். வாசலுக்கு வாசல் பூரணகும்பம். ஊர்வலக்காரர்களின் பாதங்களுக்கு இதந்தரும் முறையில் பட்டுப்போன்ற வெண்மணற் தூவல். பயபக்தியுடன் நெஞ்சில் தங்கள் மென்கரங்களைக் கூப்பியவாறு கண்களிலே நீர்த்துளிகள் ததும்ப எதையோ ஆவலுடன் கதவிடுக்கின் வழியாகப் பார்த்துக் குழம்பிநிற்கும் பாவையர் கூட்டம். நெய்யூற்றிய குத்துவிளக்குகளிலே அவசர அவசரமாக திரிபோட்டு விளக்கேற்றும் தாய்க்குலத்தின் சுறுசுறுப்பு. இவையத்தனையும்

நிறைந்த கண்கொள்ளாக் காட்சியுடன் அந்த ஊரே இன்பத்திற்கும் துன்பத்திற்கும் இடைப்பட்ட நிலையில் அல்லோல கல்லோலப்பட்டுக் கொண்டிருந்தது. எங்கோ வெகுதூரத்துக்கப் பால் நகரமண்டபக் கட்டிடத்தில் பொருத்தப் பட்டிருந்த ஒலிபெருக்கியிலிருந்து யாரோ ஒரு பெரியாருடைய வாழ்வை இசையாக்கிய பாடல் அந்த நகர் முழுதும் ஒலித்துக் கொண்டிருந்தது. சுமார் ஆயிரம்பேர் அமர்வதற்கு உள்ளே அழகான ஆசனங்கள் வேறு அந்த நகரக் கட்டிடத்தை அலங்கரித்தது.

இன்று தியாகி சாம்பசிவத்தின் நினைவுவிழா. அவரது மனைவி திருவாட்டி சாம்பசிவத்திற்கு பொற்கிளி பெறுமளவுக்கு சாம்பசிவத்தின் குடும்பம் இளைத்ததல்ல. அவர் பரம்பரைச் செல்வர் ஏராளமான நஞ்சையும் புஞ்சையும் அவருக்கு இன்றும் சொந்தமாகவே இருந்தன. இருந்தாலும் ஒரு விழாவில் பொற்கிளியோ, பொன்னாடையோ இல்லாவிட்டால் அந்த விழாவுக்குத் தான் என்ன மவுசு? என்றோ ஒருநாள் நடந்த இனக்கலவரத்தில் பாதகன் ஒருவனின் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானவர்தான் சாம்பசிவம். ஊர்வலம் மௌனமாக நகர்ந்து கொண்டிருந்தது. முன்னும் பின்னும் பலவித கார்கள் புடைசூழ முகடு திறந்த ''பிளிமத்'' காரில் திருவாட்டி சாம்பசிவம் அவர்கள் அமர்ந்திருந்தார்கள். தங்கம்போன்ற தகதகவென்ற மேனியை கையகலம் கரை போட்ட துல்லியமான வெண்ணிற ஆடை சுற்றியிருந்தது. பால்வெள்ளை நெற்றியில்

சிறிய அழகான அச்சிஞல் இடப்பெற்ற திருநீற்றுப்பூச்சு. தங்கப்பிறேம் போட்ட கண்ணுடி அணிந்த விழிகளுக்கூடாக தெறித்துச்சிதறிய விரக்திப் பார்வை அவரை ஒரு விதவையென்பதை தெட்டத்தெளிவாக எடுத்துக்காட்டியது. சருகுபோன்ற வெண்பட்டுச் சேலைத்தலைப்பால் இழுத்துப் போர்த்தியிருந்தும் முதுகு தெரியப் போட்டிருந்த சட்டையின் கோலம் மங்கலாகப் பட்டும்படாததுமாக வெளியில் தெரிந்துகொண்டிருந்தது. அம்மையார் அன்புகனிந்த புன்னகையொன்றை தனது இதழ்க்கடையோரத்திலே நெளியவிட்டுக்கொண்டே பயபக்தியுடன் வீதியில் கூடிநின்ற சனக்கூட்டத்திற்கு தனது மென்கரங்களைக் கூப்பி வணக்கம் தெரிவித்துக்கொண்டிருந்தார். திடீரென்று அவரது முகத்தில் ஏதோ ஒருவித மாற்றம். அந்த சனத்திரளில் காணுத ஒன்றை — காணக்கூடாத ஒன்றைக் கண்டுவிட்டதைப் போன்ற திகைப்பு. நீண்டு குவிந்திருந்த தனது கரங்களை டக்கென்று உள்ளேயிழுத்து மடியில் போட்டுக்கொண்டார். முகத்தை வேறு பக்கமாகத் திருப்பி பயம் கலந்த திகைப்பை தன் விழிகளுக்கூடாக செலுத்தி எதையோ வேதனையுடன் காணத் துடிப்பதுபோல் வானத்தை ஒருமுறை நிமிர்ந்துபார்த்தார். உள்ளத்தைக் கப்பிக்கொண்ட சோக உணர்வு உண்மையிலேயே அவரை விதவைக்கோலமிட்டுக் காட்டத் தொடங்கியது. நெருக்கியடித்துக் கொண்டு அம்மையாரைக் காண ஆவலுடன் முன்னேறிய ஆயிரக்கணக்கான மக்களுள் ஒருத்தியாகச் செல்லம்மா தனது ஒரே மகன் கண்

ணை இடுப்பில் இடுக்கியவாறே கண்களிலே கண்ணீர் சிந்த அங்கே நின்றுகொண்டிருந்தாள். எதிர்பாராத விதமாக திருமதி சாம்பசிவத்தின் கண்கள் அவளை சந்தித்துவிட்டதன் விளைவுதான் அவருடைய முகத்திலேற்பட்ட மாற்றங்களுக்குக் காரணம். மனதில் மின்வெட்டுகள் போன்ற எண்ணஒளி சணநேரத்தில் தோன்றிமறைந்தன. அறிவுதான் எப்போதும் தூங்குவதில்லையே.

செல்லம்மாவும், ராமசாமியும் சாம்பசிவத்தின் வீட்டில் பரம்பரையாக வேலை செய்துவந்தவர்கள். சாம்பசிவம் ஒருநாள் மிகவும் கசந்து பேசி இருவரையும் வேலையிலிருந்து விலக்கிவிட்டார். ஓரளவுக்கு எழுதப் படிக்கத் தெரிந்த சுய சிந்தனையுள்ள எந்த மனிதனும் வாழ்வில் சிறுகச் சிறுக முன்னேறுவது இயற்கைதானே. இந்த முன்னேற்றம் சாம்பசிவத்திற்குப் பிடிக்கவில்லை. ராமசாமி ஒரு சங்கத்தின் தலைவர் பதவிக்கு உயர்ந்தது சாம்பசிவத்தின் உள்ளத்தில் ஆத்திரத்தை ஏற்படுத்தியது. எந்நேரமும் தொழிலாளர்கள் ராமசாமியைச் சுற்றிக்கொண்டிருப்பதை அடிக்கடி கவனித்தார் சாம்பசிவம். மனதில் புதைந்துகொண்டிருந்ததை சொல்லவும் முடியாமல் மெல்லவும் முடியாமல் தவித்து இறுதியில் வெளிப்படையாகவே கண்டிப்பான உத்தரவை வீசினார். "இனி இந்த கூட்டம், சங்கம், எல்லாவற்றையும் விட்டுவிடு; ஒழுங்காக உன்னுடைய குழந்தை குட்டிகளுடன் வாழ்க்கை நடத்து. நான் சொல்லுறதை கவனமாகக் கேளு இல்லாவிட்டால் இங்கிருந்து வெளியே போக

வேணும்'' ராமசாமிக்கு இரவெல்லாம் ஒரே மனப்போராட்டம். முடிவு அவனும் சாதாரண மனிதன்தானே; அதிலும் குடும்பம் என்ற பொறுப்பு வேறு அவனது தலையில் பொதிந்து கிடந்தது. என்ன செய்ய முடியும்? தலைவர் பதவியை ராஜிநுமா செய்தான். காரணம் கேட்டவர்களுக்குச் சொந்த விஷயம் என்று மழுப்பி விட்டான்.

பதிவுத்தபாலொன்று ராமசாமியின் பெயருக்கு வந்திருந்தது. சாம்பசிவம் அதை வாங்கிப் பிரித்துப் பார்த்தார். முகத்தில் கோபக்கனல் பற்றி எரிந்தது. ''கூப்பிடு அவன் ராமனை'' என்று கத்தினர். கூனிக்குறுகி அங்கு வந்துநின்ற ராமசாமியைக் கண்டதும் ஆடிநடந்துவந்த அவரது ஆணவம் ஓடிப்பறந்து வந்தது. குதியாய்க் குதித்தார். ''என்னடா இது கடிதம். ஏதோ போராட்டமாம் உன்னையும் கலந்துகொள்ளும்படி அழைப்பு வந்திருக்கு.'' பல்லை நறநறவென்று கடித்தார். ''ஐயா இது ஒரு பொதுப்போராட்டம் உங்களை எந்த விதத்திலும் பாதிக்காது. இது தொழிலாளர்களின் போராட்டம் இல்லை'' யென்றான் நிதானமாக. ராமசாமி தனது பேச்சுக்கிடையில், எதையோ சுட்டிக்காட்ட விரும்புகிறான் என்பதை ஒருநொடியில் புரிந்துகொண்ட அவனது ஆத்திரம் அணையுடைத்தது. பாய்ந்து அவரது கன்னத்தில் ஓங்கி ஓங்கி அறைந்தார். ''வேலைக்கார நாயே உனக்கென்னடா போராட்டம் கால் வயிற்றை நிரப்ப முடியவில்லை. இந்த இலட்சணத்தில் போராட்டம் வேறு'' ராமசாமி

யின் உடலெங்கும் ஒரே புல்லரிப்பு. தொங்கப் போட்டிருந்த தலையை சட்டென்று நிமிர்த்தினான். தூங்கிக்கிடந்த அரிமா அரவம் கேட்டு தன் பிடரியைச் சிளிர்த்துக்கொண்டு பார்ப்பது போலிருந்தது அந்தப் பார்வை. ராமசாமியின் அந்தப் புதிய தோற்றம் சாம்பசிவத்திற்கு ஒரு புதிய பாடத்தைக் கற்பித்தது. அவர் அதை வெளியில் காட்டிக்கொள்ளவில்லை. மீண்டும் கத்தினார். ''வேலையில்லாத காலிகளுக்கெல்லாம் மாதத்திற்கொரு போராட்டம், கிழமைக்கு ஒரு வேலை நிறுத்தம்''. மீண்டும் கையைத் தூக்கினார். ஆனால் அங்கு எழுந்த அதிர்ச்சிக்குரல் அவரை நடுங்கவைத்தது. செல்லம்மா நிதானமாகப் பேசினாள். ''ஐயா அவர் இந்தப் போராட்டத்தில் கண்டிப்பாகக் கலந்துகொள்ளத்தான் போகிறார். நாங்கள் ஏழைகள்தான் ஆனால் கோழைகள் அல்ல. நானுந்தான் பார்க்கிறேன் மாடாய் உழைக்கும் அவரை நீங்கள் படுத்தும் பாட்டை. இதனால் எது வந்தாலும் அதனை ஏற்றுக்கொள்ள நான் தயாராயிருக்கிறேன். நீங்கள் புறப்படுங்கள்'' என்றாள் ராமசாமியைப் பார்த்து. ''செல்லம்மா............!'' உணர்ச்சி வசப்பட்டுக் கத்தினான் ராமசாமி. கண்களிலே தாரை தாரையாக கண்ணீர் வழிந்துகொண்டிருந்தது. தங்கள் சிறிய பெட்டி படுக்கைகளுடன் வெளியேறினர் இருவரும்.

மறுநாள் காலை ஆதவன் தன் கிரணங்களை செந்தணலாக வீசிக்கொண்டு புறப்பட்டான். அன்றைய நிகழ்ச்சிக்கு கட்டியம் கூறுவதுபோல

வெள்ளம்போல் திரண்டிருந்த மக்கள் கூட்டத்தி னிடையே ராமசாமியும் செல்லம்மாவும் முன் னணியில் திகழ்ந்தனர். செல்லம்மாவின் பேச்சி னால் தனது பரம்பரை மதிப்பை இழந்ததுபோல் துடிதுடித்த சாம்பசிவத்தின் உள்ளத்திலே சூழ்ச் சித் திட்டமொன்று உருவானது. தனது வீட்டி லிருந்து பணத்தையும் பொருளையும் மோசடி செய்ததாக போலிஸிடம் புகார் செய்த சாம்ப சிவம் அவனைக் கையும் மெய்யுமாகப் பிடிப்ப தற்கு காரிலேறிக் கூட்டத்தை நோக்கிப் பறந் தார். அவரது கார் அந்தப் பிரமாண்டமான ஊர்வலத்தை நெருங்கிக்கொண்டிருந்தது. திடீ ரென்று ஒரு துப்பாக்கி வெடிக்கும் சத்தம். கூட் டத்தில் ஒரே பரபரப்பு. பொதுமக்கள் சிதறி அங்கும் இங்கும் ஓடினர். மீண்டும் மீண்டும் துப் பாக்கி வெடிக்கும் சத்தம்.

மறுநாள் காலை வெளிவந்த பிரபல பத்திரி கைகளின் தலையங்கம் கொட்டையெழுத்துக் களில் பிரசுரமாகியிருந்தது. "நேற்று நடந்த உரிமைப் போராட்டத்தில் தியாகி சாம்பசிவம் அவர்கள் பாதகன் ஒருவனின் துப்பாக்கிச்சூட் டுக்குப் பலியாகி உயிர் நீத்தார். பொதுமக்கள் கண்ணீர் சிந்தி அழுத பரிதாபக் காட்சி". இந் தச் செய்தி காட்டுத் தீபோல் நாடெல்லாம் பரவி சாம்பசிவத்தின் வாழ்க்கைப் பாதையில் ஒரு திருப்பத்தை ஏற்படுத்தியது. இறந்தவர் கள் பட்டியலில் ராமசாமியும் ஒருவனாக இருந் [illegible] அந்த ஏழையின் தியாகத்தீ அங்கே

யாருடைய உள்ளத்தையும் ஊடுருவிச் சுட வில்லை.

காரிலே பவனியைத் தொடர்ந்துகொண் டிருந்த திருவாட்டி சாம்பசிவம் அவர்களின் கழுத்தை மாதர் சங்கம் சூட்டிய மாலையொன்று இப்போது அலங்கரித்துக்கொண்டிருந்தது. மீண் டும் தனது கைகளைத் தூக்கி நாகரீகமாக வணக் கம் தெரிவித்தார் அம்மையார். கூட்டத்தில் கூட்டமாக ஆடிஅலைந்தவர்களில் ஒருத்தியாக யாருமே கவனிக்கப்படாத ஒரு சாதாரண பெண்ணாக செல்லம்மா திரும்பிக்கொண்டிருந் தாள். மேகம் கறுத்து மழைத்துளிகள் லேசாக விழ ஆரம்பித்தன. உண்மைக்கும் போலிக்கும் வேறுபாடு காணத் தெரியாத அந்த மனிதக் கும்பலை நினைத்து இயற்கையன்னை வடிக்கும் கண்ணீர்தான் அதுவா?

# மெய்யின்பம்

[புலவர். ம. பார்வதிநாதசிவம்]

அன்பொடும் என்னைத் தாயார்
அணைத்தலும் கதைகள் கூறி
நன்மைசேர் உணவு யாவும்
நல்கலும் இடங்கள் தோறும்
பொன்னுடை சிறப்பக் கூட்டிப்
போதலும் தாமே மண்ணில்
இன்பமென் றெண்ணி னேனே
சிறுவனாய் இருந்த நாளில் !

ஆற்றினில் குதித்தல் கொம்பர்
அளித்திடும் காய்கள் உண்ணல்
சேற்றினை அள்ளிப் பள்ளிச்
சிறுமியர் மீது சிந்தல்
நூற்றுவர் நண்பர் சூழ
நோவன பலவும் கூறல்
ஆற்றுதல் இன்பம் என்றே
எண்ணினேன் பள்ளி வாழ்வில்!

கன்னியர் விழியால் கொஞ்சும்
கவினினில் மயங்கல் அன்னார்
பொன்னுடல் தழுவல் பேச்சில்
புவியினை மறத்தல் மற்றும்
கன்னலை இதழிற் கண்டு
களித்திடல் இன்பம் என்றே
எண்ணினன் பருவம் என்னும்
எல்லையை அடைந்த காலை!

செல்வத்தை ஈட்டல் தேர்தல்
செருவிலே வெல்தல் மற்றோர்
சொல்புகழ் எய்தல் என்றால்
தொல்லுல இயங்கும் என்றே

மெல்லவே நினைத்தல் என்னை
    மெச்சுதல் இவையே இங்கு
சொல்லரும் இன்ப மாகத்
    தோற்றின இடைநாள் வாழ்வில்!

இன்றியான் முதுமை என்னும்
    இருட்டறைப் புகுந்தேன் பார்வை
குன்றிற்றுச் செவியும் கேட்கும்
    குணத்திற்குத் தொலைவில் ரத்தம்
என்றதும் வற்றிக் கையில்
    எடுத்தனன் ஊன்றுங் கோலை
அன்றின்பம் என்ற எல்லாம்
    அவனியில் பொய்த்த என்பால்!

பருவங்கள் தோறும் இன்பம்
    பாரினில் மாறும் என்ற
மருமத்தை யானும் இன்றே
    மண்ணிடை உணர்ந்தேன் என்றும்
திரிபின்றிப் பருவம் தோறும்
    திகழ்ந்திடும் பிறவி தோறும்
ஒருபொருள் இன்பம் செய்யும்
    உரைக்கரும் தெய்வம் ஆகும்!

# மாரி வந்தால்!

"தாகூர் தாசன்"

மாரிவந்தால் மனங்குளிரும்
மனங்குளிர்ந்தால் மகிழ்ச்சி வரும்
மகிழ்ச்சிவந்தால் கவிதை வெள்ளம்
—கரைபுரண்டோடும்!

நெஞ்சுவயல் நிறைத்துவிடும்
நிறைந்தமனம் வளர்ந்துவிடும்
வளர்ந்துவிட்டால் கவிமணிகள்
—நெல்லெனவிளையும்!

இருண்டுவானம் இடியிடிக்கும்
இளகிமனம் வெடித்துவிடும்
வெடிப்பினிலே கவிதை மின்னல்
—பளிச்செனப்பாயும்!

சீறிச்சீறிக் காற்றடிக்கும்
காற்றடித்தால் வெறிபிடிக்கும்
வெறிபிடித்தால் கவிதைமூச்சுப்
—புயலெனவீசும்!

மதுவெனவே போதைவரும்
போதைவந்தால் தூக்கம்வரும்
தூக்கத்திலே கவிதைக்கன்னி
—கனவெனவருவாள்!

*

# நியதி!

— திமிலைக் கண்ணன் —

நெஞ்சைக் கிழித்துப் பிளந்து — தெய்வ
நீதியைக் கிள்ளி யெடுத்து
நஞ்செ(ச)ன மாற்றிடல் நன்று — கொடும்
நம்பிக்கை யென்னும் பேய்தனைப் பொல்லா..
வஞ்சக மாந்தரி னுள்ளே — இனி
வாழ விடுவது தீதினும் தீது!
அஞ்சி யஞ்சி மனம் மான — அவ
மானப் படுவதோ நீதி?

நஞ்சை அமுதெனச் செய்தேன் — கொடு
நாகத் துடன் உற வுற்றேன்
தஞ்சம் புகுந்தவர் தம்மை — உயிற்
சக்தி கொடுத்துயிர் மீட்டேன்!
பிஞ்சுக் குழந்தை களோடு — கிழப்
பிண்டங்களும், உயிர் பெற்றார்;
கொஞ்சமும் நீதி இல்லாது — அருட்
கோட்டை தகர்ந் திடலாமோ?

வஞ்சக மாந்தர்கள் தூற்ற — யோக
வாழ்வு நலிவுற லாமோ?
பஞ்சை பராரிகள், உள்ளே — தெய்வ
பக்திக்கு நான்விதை நட்டால்;
கஞ்சல் முளைத்தெள லாமோ? — விதி
கால னௌவர லாமோ?
"மிஞ்சி விட்டாய் துணிவே, நீ! — உன்னை
மிதித்து நிலத்தினில் வீழ்த்தி.........

அஞ்சே லெனுங்கரந் தன்னை — அடி
சாயப் புடைக்கிறேன்" என்று,
மிஞ்சி விட்டாய்; விதியே நீ! — என்னை
மீறி விட்டாய் விதியே நீ!

அஞ்சாத நெஞ்சத் துணிவால் — அருள்
ஆற்றல் எனுங் கடலுள்ளே;
பஞ்சம், பசி, பிணி யின்றித் — தெய்வ
பக்திப் படகினிற் சென்றேன்.

மிஞ்சி விட்டாய் விதியே! நீ! — என்னை;
மீறி விட்டாய் விதியே நீ!
நஞ்செனும் போர்வையில் வந்தாய் — நடு
ராத்திரி வேளையில் என்முன்
வஞ்சக மாந்தரினுள்ளே — இள
வாட்டமா, அந்தக் கிழவன்.
அஞ்சியஞ்சி உயிர் விட்டான் — அதை
யார்தான் பிடித்திட வல்லார்?

பிஞ்சும் அரும்பும் உதிரும் — முது
பிஞ்சும் கனியும் உதிரும்.
அஞ்சுதல் என்மட நெஞ்சே?
அசடாகிப் புலம்புதல் வேண்டா!
வஞ்சனை நீசெய்த துண்டா? — பிறன்
வாழ்க்கை நியதியை மாற்றுதல் நன்றோ?
சஞ்சலம் விட்டொழி கென்றான் — அருட்
சக்திக்கனல் அறிவாகிய கண்ணன்.

# காப்பியத்தீ

— கலியுகன் —

தீயின் தேவா என் நாட்டை
    தீண்டா திருப்பாய் என்னாளும்
பேய் போல் வீசும் புயலே நீ
    போய் என் நாட்டை யறியாதே
பாயும் வெள்ளப் பெருங்காடே
    பரவாதிருப் பாய் என வரத்தை
தாய் போய் இட்ட இராவணனின்
    தங்க நாடா தீக் காடு.

ஈழ நாட்டை மதுரை தனை
    எரித்த அந்த இருவருக்கும்
வேழ மறவர் பேரறிஞர்
    வேலையின்றிக் கோவில் கட்டி
காலந் தவறாப் பூசை யிட்டு
    காணி நிலமும் பொருள் பலவும்
மூல தானம் பண்ணி வைக்க
    முட்டாளில்லை நம் தமிழர்.

ஏட்டைச் சுட்டுப் பொசுக்குவதும்
    எண்ணக் கடலைத் தடுப்பதுவும்
வீட்டைச் சுட்டுப் பொசுக்குவதும்
    விளையும் பயிரை அழிப்பதுவும்
நாட்டைச் சுட்டுப் பொசுக்குவதும்
    நமது இலக்கியக் கொள்கையெனில்
சாட்டை கொண்டு அதைச்சாடி — எங்கள்
    சந்ததிக் காக வழி சமைப்போம்.

நீதி நிலைக்க அவைக்களத்தில்
நிலைமை தன்னை உடைக்கின்றுள்
நீதி பற்றிக் கொண்டதந்த
நிலையில் மதுரை தீக்காடாய்
நீதிக் கடவுள் பாண்டியனும்
நிலையே தவறி வீழ்ந்துவிட
நீதிச் சுடராம் கண்ணகியை
நெஞ்சில் தமிழர் கோவில் வைத்தார்.

இலங்கை அரக்கர் கொள்கைக்கு
இட்டான் அனுமான் நீதித்தீ
துலங்கி வால் போல் பிடித்தனவே
தூயநீதி ஈழமெங்கும்
கலங்கா மன்னன் இலங்கேசன்
கமல நெஞ்சில் நீர் வடித்தே
விலங்கின் இனமோ வேந்தர்க்கு
விதிக்கும் நீதி எனச் சரிந்தான்.

கற்பு நெறிக்குக் கோவில் கட்டி
கடமை தனக்குக் கோவில் கட்டி
பற்பல நாட்டார் ஆசை கொள்ள
பண்பு நிறைந்த தமிழ் நாட்டில்
அற்புதம் இதுவே எனப் புகலும்
அறிவுத் தன்மை கொண்டதுதான்.
கற்பனை வளமும் கவி நிறைவும்
கலந்த காப்பியம் தரும் நீதி.

உங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்ய
இன்றே உங்கள் அபிமானத்திற்குரிய

"ஆனந்தா ஸ்டோர்ஸை"

நாடுங்கள்

எங்களிடம்

★ பூரணாதி லேகியம் மற்றும்

★ சாப்புச் சாமான்கள்

★ பட்டர்

★ சில்லறைச் சாமான்கள்

மொத்தமாகவும் சில்லறையாகவும்
சகாய விலைக்குக் கிடைக்கும்.

# "ஆனந்தா ஸ்டோர்ஸ்"

இல. 144, சென்றல் ரேட்,
திருக்கோணமலை.

உரிமையாளர்கள்:

K. K. வேலாயுதபிள்ளை, S. பாண்டியன்.

சைவ உணவு உண்போருக்கு
உவகை அளிப்பது
"ரத்னு கபே"

சிறந்த சிற்றுண்டி வகைகளும் தேநீர், காப்பி, குளிர்பானவகைகளும் கல்கி, கல்கண்டு. கலைமகள், கலைக்கதிர் போன்ற சகல புத்தகங்களும், பத்திரிகைகளும் எம்மிடம் கிடைக்கும்.

விபரங்களுக்கு:-

"ரத்னு கபே"

நிர். 218, ஏகாம்பரம் வீதி,
திருக்கோணமலை.

சிறந்த

○ சுத்த சைவபோசனமும்
○ பலவித பலகாரவகைகளும்
○ தேனீர், காப்பி, மோர் முதலிய
○ பானவகைகளும் எந்நேரமும்

எம்மிடம் கிடைக்கும்

(விசேஷ தயாரிப்புகளும் தயார்பண்ணி குறித்த வேளையில் கொடுக்கப்படும்)

மணிஸ் கபே

இல. 333, பிரதான வீதி,
திருக்கோணமலை.

எங்களிடம்

திறம் புகையிலை, சுருட்டு

சாய்ப்புச் சாமான்களும்

பலசரக்குச் சாமான்களும்

சகாயமான மலிவு விலையில் கிடைக்கும்

கல்கி, கல்கண்டு, கலைச்செல்வி, ராணி
வார மாத இதழ்களும் எம்மிடம் கிடைக்கும்.

**"சந்திரா ஸ்டோர்ஸ்"**

இல. 333, பிரதான வீதி,
திருக்கோணமலை.

உடலுக்கும் உள்ளத்திற்கும்
உறுதியையும் உவகையையும்
அளிப்பது
"உதயா கபே"

பலகாரவகைகளும் பானவகைகளுமே!
ஒரு முறை விஜயம் செய்தால்
உண்மை விளங்கும்

வாருங்கள்...!
வந்து மகிழுங்கள்...!!

**"உதயா கபே"**

இல. 75, கச்சேரி, வீதி, திருக்கோணமலை.

[illegible]

உத்தரவாதமான உணவுவகைகளைப் புத்தம் புதிய தினுசுகளில் உங்கள் சித்தம் மகிழ நித்தம் தரவல்ல

"கிருஷ்ணபஜார் கபே"க்கு

இன்றே விஜயம் செய்யுங்கள்

* பகோடா * முறுக்கு வகைகளும்
* இட்லி * தோசை * இடியப்பம்
* அப்பம் முதலிய பலகாரவகைகளும்
எம்மிடம் எந்நேரமும் கிடைக்கும்.

இன்றே வருகை தாருங்கள்

# "கிருஷ்ணபஜார் கபே"

இல. 401, டொக்யாட் வீதி,
திருக்கோணமலை.

சுதந்திரன் அச்சகம்,
194 ஏ, பண்டாரநாயக்க மாவத்தை,
கொழும்பு-12.